உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 35 | இராக்ஷச - மாசி - 10—3—76 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

"பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

சித்திரைப் பெருவிழா

திருக்கோயிலும் - திருவிழாவும் :

இந்தியப் பெருநாடு பக்திப்பயிர் வளர்க்கும் புண்ணிய பூமியாகும். ஆன்மீக வளர்ச்சியில் உலகுக்கெல்லாம் வழிகாட்டும் பெருமை நமக்கு உண்டு. இந்தப் புனித மண்ணில்தான் பொது அறங்கள் கூறும் வேதமும், சிறப்பு அறங்களைக் கூறும் ஆகமங்களும் சிவபெருமானல் அருளிச்செய்யப்பெற்றன. சிவபெருமானின் நான்கு திருமுகங்களில் இருந்தும் எழுந்த நான்கு வேதங்களும், அதன் வழிப்பட்டுச் சிறப்பான சைவ சமய நடைமுறைகளைவிளக்கும் சிவபெருமானின் ஐந்தாவதுமுகத்திலிருந்து எழுந்த சிவாகமங்களும், வழிபாட்டு நெறிமுறைகளையும், பக்தி நெறிகளையும் வரையறுத்து வழங்கின. இவை காட்டிய நெறியில்

பெருக்கெடுத்த பக்தி வெள்ளத்தின் அங்கமாகவே நமது திருக்கோயில்களும் திருவிழாக்களும் அமைந்தன.

இறைவனின் கருணை :

உன்னைச் சிங்காரித்து உனதழகு பாராமல் என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன்" என்று அருளிச் செய்தார் நமது ஆதீனக் குருமுதல்வராகிய ஸ்ரீ ஞானசம்பந்தர். அன்பர்கள் யாவரும் ஒருங்கு கூடி, இறைவனுக்குச் சிறப்பான அபிடேகமும், அலங்காரமும் செய்வித்து, திருவீதியில் எழுந்தருளச் செய்து அவன் அருள் அழகினைக்கண்டு மகிழ்ந்தனர். அப்பெருமான் திருவீதியுலாவாக எழுந்தருளி, தம்மைத் திருக்கோயிலில் வந்து வழிபட இயலாதவர்களுக்கும், காட்சி நல்கி அவர்களையும் உய்வித்தருளுகின்றான். இது பக்தர்களுக்குப் பெருமான் வழங்கும் சார்வத்திரிக தீட்சை எனப்பெறும். திருவிழாக்கள் எல்லோரையும் திருவருள் வெள்ளத்தில் திளைக்கச்செய்வதோடு, விருந்தோம்பும் பண்பினையும், ஒருமித்த மகிழ்வினையும், சமய எழுச்சியினையும் தோற்றுவனவாக அமைகின்றன.

மாத விழாக்கள் :

தென்னாட்டுச்சைவத் திருக்கோயில்களில் நிகழும் திருவிழாக்கள் பலவகை. ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வோர் விழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றனர் மக்கள்.

மாதங்களின் தொடக்கத்தை இருவகையாகக் கொள்வது நமதுமரபு. சூரியனின் இயக்கத்தை முதலாகவைத்துக்கொண்டு அமைவது சௌரமானம் எனப்படுகிறது. அதாவது சூரியன் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசியில் பிரவேசிப்பதையே ஒரு மாதத்தின் தொடக்கமாகக்கொள்ளுகின்றோம். தமிழ்மாதங்களின் பிறப்பும், அதனை ஒட்டி அமையும் ஆண்டுப்பிறப்பும் சூரியனின் இயக்கத்தைக்கொண்டே அமைகின்றன. இவ்வகையில் நள ஆண்டுப் பிறப்பு 1976 ஏப்ரல் 13 இல் அமைகிறது. சந்திரனின் இயக்கத்தை முதலாகக்கொண்டு அமைவது சாந்திரமானம் எனப்படும். அதாவது அமாவாசையை அடுத்த முதல்நாள் (பிரதமை) தொடங்கி அடுத்த அமாவாசை வரையுள்ள ஒரு மாதத்தைச் (சந்திரன் ஒருமுறை வளர்ந்துதேய்வதை அடிப்படையாகக்கொண்டு) சாந்திரமானம் என்கின்றனர். தெலுங்கர்கள் சாந்திரமான அடிப்படையிலேயே மாதம் மற்றும்வருடத்தொடக்கத்தை மேற்கொள்ளுகின்றனர். நமது திருக்கோயில்களில் சாந்

திரமானத்தை அடிப்படையாகவைத்தே கந்தசஷ்டி நவராத்திரி போன்ற விழாக்களும் விரதாதிகளும் கொண்டாடப்படுகின்றன. சௌரமானத்தை அடிப்படையாகக்கொண்டே திருக்கோயில் களில் மகோற்சவங்கள் நிகழ்கின்றன.

தீர்த்த விழா :

பத்து நாட்களுக்கு நடைபெறும் விழாவினை பிரமோத்ஸவம் (பெருந்திரு விழா) என்று கூறுவர். விழா நாட்களின் எண்ணிக்கையில் சில மாறுபாடுகளும் உண்டு. ஆங்காங்கு உள்ள பழக்கங்களுக்கு ஒப்ப இப் பெருவிழாக்கள் ஏதேனும் ஒவ் வோர் மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றன. அம்மாதங் களின் பெயரால் சித்திரைப்பெருவிழா வைகாசிப் பெருவிழா என இவை வழங்கப்பெறும். பத்து நாள் விழாக்களில் தீர்த்தங் கொடுக்கும் விழா, பத்தாம்நாளன்று நடைபெறும். அதுவே விழாவின் நிறைவாக நடைபெறுவது.

ஆகம நெறி :

நமது திருவிழாக்கள் ஆகம நெறியில்அமைவன. உதாரண மாகச் சித்திரைப் பெருவிழாவை நோக்கலாம். சித்திரை மாதத் தில் சித்திரை நட்சத்திரமே சிறப்பு நாளாகக் கருதப்பெறும். அன்றே விழாவின் நிறைவு நாளாகக் கொள்ளப்பெறும். தீர்த்த விழாவும் அன்றே நடைபெறும். அதற்கு முற்பட்ட ஒன்பது நாட்களும் சித்திரைப் பெருவிழா நாட்களாகும். முதல் நாள் கொடியேற்றம் தொடங்கி - சித்திரை நட்சத்திரம் பௌர்ணமி யோடு இணையும் நிறைவு நாளில் இறைவன் தீர்த்தங்கொடுக்க விழா நிறைவுறும். இவை ஆகம வழிப்பட்ட விழா நடைமுறை யாகும்.

சில ஆண்டுகளில் ஒரு மாதத்தின் தொடக்கத்தில் ஒன்றும் இறுதியில் ஒன்றுமாக இரண்டு நட்சத்திரங்கள் வருவதுண்டு. இதில் எதனைத் தீர்த்த நாளாகக்கொண்டு விழாத் தொடங்குவது என்ற ஐயம் எழும். இவ்வாறு அமையுமானால் இரண்டாவதாக வரும் நட்சத்திரத்தையே சிறப்பாகக்கொள்ள வேண்டும் என்பது ஆகம விதியாக இருந்து வருகிறது.

நள ஆண்டில் சித்திரை விழா :

வரும் 'நள' வருடத்தில் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம், இரண்டாம் நாள் புதன்கிழமையும்; முப்பதாம்நாள்

புதன்கிழமையும் என இருமுறை வருகிறது இவ்வாறு இரண்டு நட்சத்திரங்கள் வந்தால் இரண்டாவதாகவரும் நட்சத்திரத்திற்குரிய நாளையே தீர்த்த விழாவிற்குரிய நாளாகக் கொள்ளவேண்டும் என்பது பொது விதி என்றாலும் பௌர்ணமி எதனோடு கூடிவருகிறதோ அதனையே தீர்த்த விழாவிற்குரிய நாளாகக் கொள்ளவேண்டும் என்பது சிறப்பு விதி *. இவ்வடிப்படையில் நள ஆண்டு சித்திரைமாதத்தில் சித்திரை நட்சத்திரம் இரண்டு வந்தாலும், முன்னதாக சித்திரை 2-ஆம் நாள் புதனன்றுவரும் சித்திரை நட்சத்திரமே பௌர்ணமியோடு இணைந்துவருகிறது. அதனைச் சிறப்பாகக்கொண்டே இவ்வாண்டு சித்திரைத் தீர்த்த விழா சித்திரை 2-ஆம் நாள் புதன்கிழமை அன்று கொண்டாடப் பட இருக்கிறது. அதற்கு முந்திய ஒன்பது நாட்கள் பெருந் திருவிழா நாட்களாக அமைகின்றன. இம்முறையில் மதுரையிலும், தருமை ஆதீனத்திற்குட்பட்ட சீகாழி, திருக்கடவூர், திருப்பனந்தாள் முதலிய தலங்களிலும் திருவிழா நடைபெற இருக்கிறது.

ஒரு சிறப்புவிதி :

இதுவரை ஒருமாதத்தில் இரண்டு நக்ஷத்திரம் வந்தால் பௌர்ணமியுடன் கூடிய நக்ஷத்திரமே சிறந்தது என்பதைக் கண்டோம். ஓரேமாதத்தில் ஒரே நக்ஷத்திரம்வந்து அதனுடன் பௌர்ணமி இணையாவிடின், தீர்த்தம் நக்ஷத்திரத்தில் கொடுப்பதா அல்லது பௌர்ணமியில் கொடுப்பதா என்ற ஐயம் எழும். அதனையும் இப்பொழுது தெரிந்துகொள்ளுதல் நலமே. தீர்த்தம் கொடுக்கும் இடம் கடலாக இருக்குமானல் பௌர்ணமிதான் பிரதானம். நக்ஷத்திரத்தைக்கொள்ளவேண்டியது இல்லை. தீர்த்தம்கொடுக்கும் இடம் குளம் ஆறு முதலியனவாக இருந்தால் நக்ஷத்திரமே பிரதானம் என்பது வழக்கத்தில் உள்ளது.

தீர்த்தத்வயே ச சம்ப்ராப்த்தே சைக மாசே பரம் வரம்
தத்ராபி யோக யுக்தஞ்சேத் பூர்வம் சங்க்ராஹ்யமேவச ||
(காமிகாகமம்)

---

* தீர்த்தரிக்ஷே பர்வசம்யுக்தே ச்ரேஷ்டம் வைநிர்மிதம் பவேத்
பூர்வே திதிரிக்ஷ ஸம்யுக்த்தே தத்திநௌ ஸ்ஞானமாசரேத் |
(பாரமேச்வர ஆகமம்)

ஏகமாசே த்விநக்ஷத்ரே த்விதிதிர்வா பவேத்யதி |
ஆதிதோ தேவ கார்யாணி பித்ருகார்யாணி சோத்தரே |
(வீராகமத்தில்)

திருவையாற்றில் சித்திரை விழா :

இதுவரை இங்கே குறிப்பிட்ட நெறிகளில் சிறிது மாறி நள ஆண்டு சித்திரைப் பெருவிழா, நமது ஆதீனத்திற்குட்பட்ட திருவையாற்றில் இரண்டாவதாக வரும் சித்திரை நட்சத்திரத்தைத் தீர்த்தவிழாவாகக் கொண்டு அதற்குமுன் ஒன்பது நாட்களும் நடைபெறவுள்ளது.

இதற்கு வேறு காரணம் உண்டு. திருவையாறு நந்திகேசுவரர் அவதரித்தருளிய தலம். அவர் அவதரித்தநாள் விழா பங்குனித் திருவாதிரை ஆகும். அதற்கு அடுத்தநாள் நந்திகேசுவரர் திருமண விழா; திருவையாற்றை அடுத்த திருமழபாடியில் நிகழும். திருவையாற்று இறைவனுடன் நந்திகேசுவரர் திருமழபாடிக்கு அன்று எழுந்தருளுவர். அதாவது நந்திகேசுவரர் திருமணம் இவ்வாண்டு பங்குனி 25 ஆம் நாள் புதன் கிழமை அன்றுவருகிறது.

முன்சொல்லியவிதிப்படி நள ஆண்டு சித்திரை 2ஆம் நாளைத் தீர்த்தவிழா நாளாகக்கொண்டு அதற்குமுன் ஒன்பதுநாள் திருவிழாகொண்டாடினல், பங்குனி 23 ஆம் நாள்கொடிஏறவேண்டும். திருவையாற்றைப் பொருத்தவரை இவ்வாறு அமைந்தால் நந்திகேசுவரர் திருமணம் மூன்றும் திருநாளன்று அமைந்து விடும். திருவிழாக் கொடி ஏறிவிட்டால் இறைவன் தலத்தைக் கடந்து எழுந்தருள்வது கூடாது என்பது ஆகம விதியாகும். இவ்விதிப்படி நந்திகேசுவரருக்குத் திருமழபாடியில் நடைபெறும் திருமணத்திற்கு இறைவன் எழுந்தருளுவது தடைப்படும். எனவே, இதனைத்தவிர்க்கவே திருவையாற்றில் சித்திரைப் பெருவிழா, பௌர்ணமியோடு சித்திரை நட்சத்திரம் இணையாவிட்டாலும், அத்தலத்தில் நந்திகேஸ்வரருக்குவழங்கும் சிறப்புக் காரணமாக இரண்டாவதாக வரும் சித்திரை நட்சத்திரத்தில் ஆகமத்தின் பொது விதிப்படி, இவ்வாண்டு நடைபெறும்.

முடிவுரை :

இவ்வாறு வேதசிவாகமமரபுகளையும், அவ்வத்தலங்களுக்கும் உரிய சிறப்பான புராண வரலாற்று மரபுகளையும் நினைவுகூர்ந்து அதற்குத்தகப் பெருந்திருநாட்களை வரையறுத்து சிறப்பாக நிகழ்த்துவித்து மக்கள், விழாப்பயன் கொண்டு, சிவபெருமான் திருவருள் பெற்று உய்வார்களாக.

உ

குருபாதம்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருமந்திரம் பற்றி வழங்கிய

அருளுரை*

" குடிமன்னு சாத்தனூர்க்கோக்குலம் மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென் உச்சி
அடிமன்ன வைத்தபிரான் மூலனுகின்ற அங்கணனே "

மந்திரமாவது யாது ?

முதலில் திருமூல தேவநாயனரது அருள் வரலாற்றைச் சிந்தித்தோம். அடுத்துத் திருமந்திரப் பொருள் நிலை நமது சிந்தனைக்கு உரியதாகிறது. அதாவது திருமந்திர நூல் எப்படி அமைந்திருக்கிறது என்பதனை ஆராய்வதாகும். திருமுறைகள் அனைத்தும் தோத்திரம் என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றன. என்றாலும், பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் சாத்திரமாகவே அமைந்துள்ளது. இதுபற்றியே இதற்கு ஆசிரியர் ஒரு பெயரிடக் கருதி திருமந்திரமாலை எனப் பெயரிட்டார். மந்திரம் என்பது பொதுவாக எங்கும் இருப்பினும், அது சிறப்பாக இருப்பது வேதசிவாகமங்களிலே தான். திருமந்திர நூல் சிவாகமப் பொருளையே தமிழால் கூறுவது என்பது யாவரும் அறிந்த ஒன்று. எனவே, திருமந்திரம் சிறப்பு நூலாகத் திகழ்கிறது. மந்திரம் என்ற சொல்லுக்கு 'நினைப்பவரைக் காப்பது' என்பது பொருளாகக் கொள்ளப் படுகிறது. அந்தச் சொல்லுக்கு ஆற்றல் மிகுதியாக உண்டு. ஆக்கத்தையும் மந்திரம் செய்யும் அழிவையும் அம்மந்திரம் செய்யும்.

---

*24—11—75 அன்று திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பிய இலக்கியச் சோலைப் பகுதிக்கு வழங்கியருளியதைத் தழுவியது.

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப".

என்பது தொல்காப்பியம். (பொருளதிகாரம் - சூத்திரம் - 480)

" நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் "

என்பது திருக்குறள். (அறத்துப்பால் - 28)

ஒரு பொருளைச் சொல்லுமிடத்து முதலில் பொதுவாகச் சொல்ல வேண்டும். பின்னர் சிறப்பாகச் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால்தான் கேட்பவர்களுக்கு அந்தப் பொருள் இனிது விளங்கும். முதலிலேயே சிறப்பாகச் சொன்னால் அது விளங்காது. இனி, பொதுவாக மட்டும் சொல்லி விட்டாலும் பொருளை உண்மையில் முழுமையாகச்சொன்னதாகாது. அதனால் பொருள்களைப் பொதுவாகவும் சிறப்பாகவும் சொல்லவேண்டியுள்ளது. அம்முறையில் பொதுவாகச் சொன்ன நூல் வேதம்; சிறப்பாகச் சொன்ன நூல் சிவாகமம். சிவாகமத்தை முதல் நூலாகக் கொள்ளாத சிலர் சிவாகமம் வேதத்தோடு சில இடங்களில் மாறுபடுகிறது என்கிறார்கள். வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேற்றுமை சாதாரண மக்களால் கூறப்படுகிறதேயன்றி உயர்ந்தோரால் கூறப்படாது என்பதையும் திருமூலர் தமது நூலில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

"வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்;
ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உள்ளுக;
நாதன் உரை அவை; நாடில் இரண்டந்தம்
பேதம தென்னில் பெரியோர்க் கபேதமே".

திருக்குறளும் திருமந்திரமும் :

நன்னெறியைப் பொதுவாகச் சொல்லுமிடத்து அஃது அறநெறியாகவும் பொதுச் சமயமாகவும் அமைகின்றது. சிறப்பாகச் சொல்லுமிடத்து அது ஒரு குறிப்பிட்ட சமயமாகவும் அதிலும் சைவ சமயமாகவும் அமைகின்றது. அதனால், அறநூலாகவும் பொதுச்சமய நூலாகவும் உள்ள வேதத்தைப் பலர் ஏற்றுக் கொள்கிறார்கள் குறிப்பிட்ட ஒரு சமயத்தைக்கூறும் நூலாகிய சிவாகமங்களைப் பலர் ஏற்றுக்கொள்வதில்லை.

தமிழில் வேதம் போல உள்ள பொதுநூல் திருக்குறள். அவ்வாறே சிவாகமமாகிய சிறப்பு நூலாக விளங்குவது

திருமந்திரம். அதனாலேதான் திருமூலர் ஆகமங்களைத் தமிழிலே செய்தேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, திருக்குறளை உலக நூலாகக்கொண்டு போற்றிக் கற்கின்ற யாவரும் திருமந்திரத்தையும் அங்ஙனம் கற்றற்குரியவர்களே..

நான்கு பெருநிலைகள்:

சிவாகமங்கள் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என நால்வகைப்பட்டு ஞானம், யோகம், கிரியை, சரியை நான்கையும் கூறுவன என்பது பலரும் அறிந்தது. ஞானம் என்றால் அறிவு. யோகம் என்று சொன்னால் இறைவனோடு ஒன்றி இருக்கின்ற ஒரு நிலை. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லுவதும் இவற்றை முறைமாற்றி ஞானம் யோகம் கிரியை சரியை என்று கூறுவதும் மரபு.

சரியை என்று சொன்னால் அறிவு கொஞ்சமிருந்தால் போதும். உடல் வலிவு அதிகமாகத் தேவைப்படுவது. அதாவது உத்தேசமாக எழுபத்தைந்து சதம் உடல்வேலையும் இருபத்தைந்து சதம் அறிவு வேலையும் இருப்பதைச் சரியைத் தொண்டு என்று சொல்லலாம். நந்தவனம் அமைத்தல், மலர் எடுத்தல் தொடுத்தல் முதலியனவும் ஆண்டவனுக்கும், அடியார்களுக்கும் தொண்டு செய்தல் முதலியனவும் போல்வன சரியைத் தொண்டாகும்.

கிரியை என்பது அறிவும் உடலும் சமமாக இணைந்து செய்ய வேண்டிய ஒன்று. அது அகத்தும் புறத்தும் சிவபூஜை புரிதல் முதலியன. கிரியை நிலையில் அறிவும் வேலை செய்யவேண்டும், உடல் முதலிய கருவிகளும் வேலை செய்யவேண்டும்.

யோகம் என்பது எழுபத்தைந்து சதவிகிதம் உயிர் - அறிவு வேலை செய்யவேண்டும். உடல்வேலை யோக நிலையில் அதிகம் வேண்டப்படுவதில்லை.

ஞானம் என்பது பரம்பொருளோடு ஒன்றிய நிலை. அவன் வேறு தான்வேறு என்றில்லாமல் இருக்கக்கூடிய நிலைதான் ஞான நிலை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த நான்கு நிலைகளையும் சிவாகமங்களின் சாரமாக நமக்கு எடுத்து விளக்குகிறார் திருமூலர். .

சரியையினால் வருவதும் அறிவு விளக்கம். கிரியையினால் வருவதும் அறிவு விளக்கம். யோகத்தால் வருவதும் அதுதான்.

ஞானத்தால் வருவதும், ஞானவடிவாக இருக்கின்ற பரம் பொருளை அடைந்து அதுவேறு தான்வேறு என்று இல்லாதிருப்பதுதான். இந்நிலையை,

" விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே "

என்று விளக்குகின்றார் தாயுமானவர். (பராபரக்கண்ணி 157)

திருமந்திரம் ஞானம் முதலிய நான்கையும் கூறுவது என்பதனை மேலே கண்டோம். " ஞானம் முதல் நான்கும் மலர் நல் திருமந்திர மாலை" என்பது சேக்கிழார் திருவாக்கு. இவற்றுடன் பல அறங்களையும் இந்நூலில் ஆசிரியர் அருளிச்செய்துள்ளார். ஆகவே, திருமந்திரம் முற்ற முடிந்த ஒரு நிறைவான நூல் என்பது விளங்கும்.

பாயிரப் பொருள்:

நாயனர் இதனை ஒன்பது பாகமாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திற்கும் தந்திரம் என்று பெயரிட்டுள்ளார். தந்திரம் என்பது நூலுக்குப் பெயர், எனினும் அஃது ஆகமத்திற்குச் சிறப்புப் பெயராய் வழங்கும். திருமூலர் தாம் நந்திதேவரிடத்து ஒன்பது ஆகமங்களைப் பெற்றதாக அவரே பாயிரத்தில் கூறியுள்ளார். பாயிரத்தில் கடவுள் வாழ்த்தோடு சிவபரத்துவத்தையும் விரித்துக் கூறிப் பின்பிறவற்றையும்கூறியுள்ளார். சிவபரத்துவத்தை வலியுறுத்தல் சிறப்பு நூலுக்கு இன்றியமையாத ஒன்று. சிவபரத்துவத்துக்குப் பின் சைவசமய முதல் நூல்களாகிய வேதத்தின் சிறப்பு, ஆகமத்தின் சிறப்புக்களைக் கூறியிருப்பதுடன் அவையடக்கமும் சொல்லியுள்ளார்.

பாயிரத்தில் நாயனர் தமது வரலாற்றையும், தமது சந்தானங்களையும் (அதாவது, ஒருவருக்குப் புத்திர சந்தானம்போல, இந்த உயரிய ஞானத்தை வழி வழியாக நடத்திவருகின்ற குரு – சிஷ்ய மரபு) கூறியிருத்தல் இக்காலத்தில் மிகவும் போற்றத்தக்க ஒன்று. நூலுள்ளேயும் நாயனர் அகச்சான்றாகக் கூறுவன பல. இஃது இத்திருமுறைக்கு உள்ள தனிச்சிறப்பாகும்.

முதல் தந்திரம்:

முதல் தந்திரத்தில் தொடக்கத்திலே உபதேசம் என்னும் தலைப்பில் அந்தாதியாகச் சென்று மண்டலித்து முடியும் முப்பது

மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை சைவாகமங்களின் சாரத்தை மிக நன்முக வடித்துத் தருவனவாக அமைந்துள்ளன. பின்னர், முதல் தந்திரம் முழுவதும் ஆசிரியர் பல்வேறு நிலையாமைகள், கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர் மனை நயவாமை முதலிய பொது அறங்களையும், அந்தணர் ஒழுக்கம், அரசர் கடமை முதலியசிறப்பு அறங்களையும் கூறியுள்ளார். கல்விகேள்விகளையும், நாயனுர் அறமாகக்கருதி விளக்கிக்கூறி யிருக்கிருர். இங்கே கல்வி, கேள்வி என்பன சிவபரம்பொருளை அறியும் கல்வியாகவும், அவன் பேரருளையும் பெருங்கருணையையும் கேட்கும் கேள்வியுமாகவே கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் தந்திரம் :

இரண்டாம் தந்திரத்தில் சிவபெருமானின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களும், அப்பெருமானின் அட்டவீரட்டச்செயல்களில் உண்மைத் தத்துவமும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயில், தீர்த்தம் இவற்றின் சிறப்புக்களும், சிவநிந்தை, குருநிந்தை மயேசுர நிந்தை இவற்ருல்வரும் கேடும், பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் முதலிய அறங்களும், சிவனைத் தரிசிக்கும் பாத்திரம் ஆகின்றவர் ஆகாதவர்களது இயல்பும், கரு உற்பத்தி முதலிய யோக முடிபுகளும் பிறவும் நுட்பமாக விரித்துரைக்கப்பெற்றுள்ளன.

மூன்ரும் தந்திரம் :

மூன்ரும் தந்திரத்தில் இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோகங்களும் இவற்ருல் பெறும் பயனும், பிறிதோர் உடலிற் புகுவது முதலிய அட்டமா சித்திகளும், காயசித்தி உபாயமும், காலசக்கரங்களும், கேசரியோகம், பரியங்கயோகம், சந்திரயோகம் முதலிய யோக நிலைகளும், வாரசரம், வாரசூலம் முதலிய கோள் நிலைகளும் பிறவும் விரித்துரைக்கப்பெறுகின் றன.

நான்காம் தந்திரம் :

நான்காம் தந்திரம் முழுவதும் யந்திரங்களைப் பற்றியும், அதிலே அமைக்க வேண்டிய மந்திரங்களைப் பற்றியும் சொல்லப்படுகிறது. அதிலே, பல சக்கரங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்ருர், சாம்பவி மண்டலச் சக்கரம், திரு அம்பலச் சக்கரம், நவாட்சரி சக்கரம், புவனபதி சக்கரம், வயிரவ சக்கரம், பயிரவி

மந்திரம் ஆகியன கூறப்படுகின்றன. இவற்றை எல்லாம் பயில வேண்டிய முறை; அதிலே எழுதவேண்டிய அட்சரங்கள், அதற் குண்டாகின்ற பலன்கள், அதனை எப்படிப் பூஜிக்கவேண்டும், எப்படி அதனை ஜபிக்கவேண்டும் என்ற முறைகளையும் சொல்லி அதற்குரிய பலன்களையும் சொல்லியுள்ளார். அச்சக்கரங்களில் பஞ்சாக்கரம் பலவகை மாற்றங்களுடன் அமைதலையும் ஆசிரியர் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்.

ஐந்தாம் தந்திரம் :

இவ்வைந்தாம் தந்திரத்தில் சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்கசைவம், கடுஞ்சுத்தசைவம் என்னும் நால்வகைச்சைவமும், சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நால்வகை நிலைகளும், சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம் தாசமார்க்கம் முதலிய நால்வகை மார்க்கங்களும், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் முதலிய நான்கு முத்திநிலைகளும், மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் முதலாய நான்குவகை சத்திநிபாதமும், மற்றும் புறச்சமயதூடணம், நிராசாரம், உட்சமயம் முதலிய நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன.

ஆறும் தந்திரம் :

இந்த ஆறும் தந்திரம் சிவகுருதரிசனம், திருவடிப்பேறு முதலியவற்றை முதலில் விளக்குகிறது. அடுத்துத் துறவு, தவம் இவற்றின் சிறப்பினையும், தவநிந்தையால்வரும் கேட்டினை யும் விரித்துரைக்கிறது. அவவேடத்தையும் தவவேடத்தினை யும் வேறுபடுத்திக்காட்டுகிறது. திருநீற்றின் சிறப்பினை விளக்கு கிறது. ஞானவேடம் மற்றும் சிவவேட உயர்வினைப்பேசுகிறது, திருவடிப்பேற்றிற்குரிய பக்குவன் யாவன் என்பதனையும், அதற்கு உரியனல்லாத அபக்குவன் இயல்பினையும் பேசி நிறை கிறது.

ஏழாம் தந்திரம் :

ஏழாம் தந்திரத்தில் கிரியைகளை விரித்துக் கூறுகின்றார். சிவலிங்கம் எப்படிச் செய்யவேண்டும், எந்த எந்த வஸ்துக் களிலே சிவலிங்கம் செய்யலாம்; அதனைப் பூஜை செய்தால் என்ன என்ன பலன்? இவற்றையெல்லாம் விரித்துச் சொல்லுகிறார். சிவபூஜை செய்யவேண்டியமுறைகள், மாகேசுவரபூஜை, குருவை பூஜிக்கவேண்டிய முறை, போஜனவிதி முதலியனவும் கூறப்படு கின்றன. சாப்பிடுவதுகூட எப்படி என்று சைவத்திலே சொல்லப்

படுகின்றது, அடுத்து, பிட்சாவிதி, முத்திரைகள் முதலியவை களைக் கூறுதலோடு, சமாதிக் கிரியைகளும் சொல்லப்படுகின்றன. அதனை எப்படிச்செய்யவேண்டும் என்பதனையும் குறிப்பிடுகின்றார், அதோடு சமாதி யாருக்கிடுவது என்றும் எல்லோரையும் சமாதியில் வைப்பது கூடாது என்றும், யோகிகள் ஞானிகள் இப்படிப் பட்டவர்களைத்தான் சமாதியில் வைக்கவேண்டும் என்றும், மற்றவர்களை எரிக்கவேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். ஞானிகளை எரித்தால் அது ஆண்டவனையே எரித்தாற்போல் ஆகும்; அது நாட்டையே கொளுத்திவிடும் என்றும் மற்றோரிடத்திலே குறிப்பிடுகிறார். ஞானிகளுடைய உடம்பே கோயிலாகக் கருதப்படுதலால், அதனைக் கோயிலுக்குரிய மரியாதையோடு வைத்துப் பூசிக்கவேண்டும். அதனாலேதான் அந்தக் குருவை நல்ல முறையில் அடக்கஞ்செய்து, அந்த இடத்திலே கோயில் எடுத்து வழிபாடு, நித்திய பூஜைகள் நிகழ்த்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் ஐந்து இந்திரியங்களை அடக்கும் முறை சத்குரு, அசத்குரு முதலியனவும் இந்த ஏழாம் தந்திரத்தில் கூறப்படுகின்றன.

எட்டாம் தந்திரம் :

எட்டாம் தந்திரம் சைவ – சித்தாந்தத் தத்துவங்கள் பலவற்றையும் விரிவாகக்கூறுகிறது. உடலிற் பஞ்சபேதங்கள், அவத்தைபேதங்கள், அத்துவாக்கள், கேவலம் முதலிய தன்மைகள், ஆறந்தங்கள், முக்குற்றம், முப்பதம், முப்பரம், முச்சொரூபம், முப்பாழ், முக்குண அவத்தை இவைகளை விளக்குவதோடு, வாய்மை, அவா அறுத்தல், பத்தி, முத்தி முதலியவற்றையும் விரித்துரைக்கிறது:

ஒன்பதாம் தந்திரம் :

அஃதாவது நூலின் வழியாகப் பல தந்திரங்களில் கூற விடுபட்டதை எல்லாம் ஒருங்கு தொகுத்து முடிவாக ஒன்பதாந் தந்திரத்தில் விரித்துச்சொல்லுகிறார். இது பஞ்சாக்கர விளக்கம், நடராசப்பெருமான் திருக்கூத்துஉண்மை, அணைந்தோர்தன்மை தோத்திரம் முதலியனவும் இத்தந்திரத்திலேதான் உள்ளன. மந்திரம் போன்று பொருள்களை மறைத்துக்கூறும் சித்தர்பாடல் முறையில் உள்ள சூனிய சம்பாஷணை என்பதும் இதிலேதான் உள்ளது.

முடிவுரை :

இப்படிப் பலவகையாலும் பொருள்களை நிரம்பக் கூறியுள்ள நிறைவுடைய நூலாகிய திருமந்திரத்தை மக்கள் படித்து இயன்ற அளவு பொருளை உணர்ந்து பயன்பெறுதல் இன்றியமையாததாகும். திருமந்திரம் யோக நூல் என்று பலரும் கூறுதற்கு ஏற்ப இதில் எவ்விடத்திலும் யோகநடை காணப்படுதல் குறிப்பிடத்தக்கது.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில்

சித்திரைத்திங்கள் பெரு விழா

சீகாழியில்

5—4—76	திங்கள்,	கொடியேற்று விழா
6—4—76	செவ்வாய்.	திருமுலைப்பால் விழா
9—4—76	வெள்ளி.	சகோபுரத்தில் இடபவாகனக் காட்சி
10—4—76	சனி.	திருக்கல்யாணம்
12—4—76	திங்கள்	திருத்தேர்
13—4—76	செவ்வாய்	
14—4—76	புதன்.	தீர்த்தத் திருவிழா

திருக்கடவூரில்

5—4—76	திங்கள்.	கொடியேற்று விழா
7—4—76	புதன்.	திருக்கல்யாணம்
9—4—76	வெள்ளி.	சகோபுரத்தில் இடபவாகனக் காட்சி
10—4—76	சனி.	காலசம்காரம்
12—4—76	திங்கள்.	திருத்தேர்
14—4—76	புதன்.	தீர்த்தத் திருவிழா

திருப்பனந்தாளில்

5—4—76	திங்கள்.	கொடியேற்று விழா
9—4—76	வெள்ளி	தன்னைத்தான் அருச்சித்தலும், சகோபுரத்தில் இடபவாகனக் காட்சியும்.
11—4—76	ஞாயிறு.	திருக்கல்யாணம்
13—4—76	செவ்வாய்.	திருத்தேர் வீதியுலா
14—4—76	புதன்.	தீர்த்தத் திருவிழா

உ

சிவமயம்

திருவாமூரில்

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியுடன் திருநாவுக்கரசு சுவாமிகள் அவதாரத்தலமாகிய திருவாமூரில் - அப்பர் திருக்கோயிலில் 22—4—76 வியாழக்கிழமை முதல் 24—4—76 சனிக்கிழமை முடிய மூன்று நாட்கள் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெறும். மூன்று நாட்களிலும் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகள் முதலியன நிகழும்.

குருபூசைத் திருநாள் 24—4—76

24—4—76 சனிக்கிழமை காலை 10 - 30 மணிக்கு ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழும். அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அபிஷேகதரிசனத்திற்கு எழுந்தருள்வார்கள்.

திருமுறை மாநாடு, திருமுறைப் பாராயணம், கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமண்டபம் முதலியனவும், பொம்மலாட்டம், நாட்டிய நாடகம், பண்ணிசையரங்கு முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூஜை விழாவிற்குக் காணிக்கைகள் நன்கொடைகள், அபிஷேகப் பொருள்கள், மாகேசுவர பூசைக்குரிய பொருள்கள் அனுப்ப விரும்புவோர், G. வாகீசம் பிள்ளை, செயலாளர், திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக்குழு, கனகசபைநகர், சிதம்பரம் என்ற முகவரிக்கும், குருபூஜை விழாவின்போது 20, 21, 22, 23, 24—4—76 ஆகிய நாட்களில் அனுப்புவோர் :- செயலாளர், திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக்குழு, ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருக்கோயில், திருவாமூர், பண்ணுருட்டி வழி, தெ. ஆ. மாவட்டம் என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

சீகாழித் தலச் சிறப்பு

பிரமபுரம், வேணுபுரம் முதலிய பன்னிரு திருப்பெயர்களைப் பெற்றதும் திருஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரம் செய்து உமையம்மை அளித்த சிவஞானப் பாலமுதுண்டு உலகமுய்ய தேவாரம் அருளிச் செய்யத் தொடங்கியதுமாகிய திருத்தலம் சீகாழி.

சோழநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று. தருமையாதீனத்துக்குச் சொந்தமான 27 தேவஸ்தானங்களில் ஒன்ருய்ச் சிறந்த முறையில் பரிபாலிக்கப்பெறுகிறது இத் திருக்கோயில்.

ஆகம முறைப்படி ஆறுகால் பூசைகள் நிகழ்கின்றன. சித்திரைத் திங்களில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. அதில் இரண்டாம் திருவிழா திருமுலைப்பால் உற்சவம், அன்று ஞானசம்பந்தருக்கு அம்பாள் ஞானப்பாலளித்தஐதிகம் நிகழும்.

ஊர் நடுவில் விளங்குகிறது இக்கோயில். அம்பாள்சந்நிதியில் பிரம தீர்த்தம் உள்ளது. சுவாமி அம்பாள் கோயில்கள் தனித்தனியே உள்ளன சுவாமி அம்பாள் கோயிலுக்கிடையே திருஞானசம்பந்தர் கோயில் உள்ளது. மலையில் ஸ்ரீ பெரிய நாயகியாருடன் திருத்தோணியப்பர் உருவத் திருமேனியோடு விளங்குகின்ருர். மலையின் தென்புறம் இத்தலத்திற்கு மிக்க சிறப்பைத்தரும் மூர்த்தியாகிய ஸ்ரீ சட்டைநாதர் எழுந்தருளியிருக்கிருர்

இத்தலத்தில் விளங்கும் இறைவர் திருப்பெயர் ஸ்ரீ பிரமபுரீசுவரர். அம்பாள் திருப்பெயர் ஸ்ரீ திருநிலைநாயகி. தீர்த்தங்கள் :— பிரம தீர்த்தம், காளி தீர்த்தம் கழுமலநதி முதலியனவாகும். தல விருக்ஷம் :— பாரிஜாதம்.

திருமால் மாவலிபால் குறளுருவாகச் சென்று மூன்றடி மண் கேட்டு விண்மண் ஆகியவற்றை ஈரடியால் அளந்து மூன்ருவதடியை அவன் தலைமேல்வைத்து அவனை அழித்தார். அதனுல் அகங்காரம்கொண்டு திரிந்தார். இதனை யறிந்த வடுகநாதர் விஷ்ணுவை மார்பில் அடித்து வீழ்த்தினுர். இலக்குமி மாங்கல்ய பிச்சை வேண்டியதால் விஷ்ணுவை

எழுப்பிவிட்டார். திருமால் வேண்டுகோளின்படி அவர் தம் எலும்பையும், தோலையும் அணிந்து சட்டநாதராக எழுந்தருளினர்.

திருஞானசம்பந்தர்:- இத்தலத்தில் கவுணிய கோத்திரத்தில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் அரிய மைந்தராய் திருஞானசம்பந்தர் அவதரித்தார். மூன்றும் வயதில் நீராடச் சென்ற தந்தையாரோடு தாமும் சென்று பிரம தீர்த்தக்கரையில் இருந்தார். குளத்தில்மூழ்கி அகமருஷண ஜபம் செய்த தந்தையாரைக் காணுமல் முன்னைப் பிறவியின் உணர்ச்சி மேலிட திருத்தோணிமலைச் சிகரம் நோக்கி அம்மையே அப்பா என அழுதார். பெருமான் அம்மையை நோக்கி திருமுலைப்பால் கொடுத்தருள்க என்றருளினர். அம்மை பொற்கிண்ணம் ஒன்றில் பாலைக்கறந்து ஞானத்தைக் குழைத்து ஊட்டி மறைந்தார். உண்ட பிள்ளையார் ஞானசம்பந்தர் ஆனர். கரையேறிய தந்தையார் கடைவாயில் பால் வழியும் பிள்ளையை நோக்கி [யார் கொடுத்த பாலை உண்டாய் என்று சினந்து கேட்க இடபாருடராய் எழுந்தருளிவந்து பாலமுதளித்த இறைவனை, கைவிரல் ஒன்றினுல் சுட்டிக் காட்டித் "தோடுடைய செவியன்" என்ற திருப்பதிகம் பாடியருளினர். பின்னர் சைவ சமயம் உலகில் நிலைபெறுமாறு பற்பல செயற்கரும் செயல்களைச் செய்து தலங்கள்தோறும் சென்று தேவாரத் திருப்பதிகங்கள் பாடி நல்லூர்ப்பெருமணம் என்னும் ஆச்சாள்புரத்தில் தமது பதினுருவதுவயதில் வைகாசி மூலத் திருநாளில் திருமணத்திற்கு வந்திருந்த அன்பர் கூட்டத்தினருடன் சிவசோதியிற் கலந்தருளினர் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு அருளிச் செய்த திருப்பதிகங்கள் 67. திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் 3. சுந்தரர் பாடிய பதிகம் ஒன்று. மணிவாசகர் பிடித்தபத்து அருளிச்செய்துள்ளார்.

பூந்துருத்தி நம்பி காடநம்பி, பட்டினத்தார், கணநாதர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், அருணகிரிநாதர், மச்சுச் செட்டியார், சிவஞான தேசிகர், சிதம்பர நாதமுனிவர், அருணசலக் கவிராயர், முதலியோர் இத்தலத்திறைவனை வழிபட்டுப் பல்வகைப் பாமாலைகள் புனைந்து நலம் பெற்றோராவர்.

திருவாசகத்தில் ஒரு மணிவாசகம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M A, M. O L.,

(மலர் 35, இதழ் 3, பக்கம் 12 இன் தொடர்ச்சி)

(8) 'நினைப்பற நினைந்தேன்' என்னும் தொடர், இப்பாடலில் மாணிக்கவாசகரால் முதன் முதலிற் புதிதாகப் படைத்து வழங்கப்பெற்ற அருமைமிக்க - ஓர் அழகிய - பொருள் பொதிந்த சொற்றொடர் எனலாம்! 'நினைப்பு' என்பது மறப்பின் பின் நிகழ்வது. மறந்ததை நினைப்பதும், நினைந்ததை மறப்பதும் நம்மனோர்க்கு இயல்பு. மாறி மாறி அடுத்தடுத்து நிகழும் நினைப்பு மறப்புக்கள் இல்லாதபடி, எப்பொழுதும் இடைவிடாமல் இறைவனைத் தியானித்துக்கொண்டு, அவனோடு ஒன்றியிருக்கும் திருவருட் பேற்றினை எய்தப் பெற்றமையினால் மணிவாசகர் 'நினைப்பற நினைந்தேன்' என்று அருளிச்செய்தார். இதனைச் 'சாக்கிர அதீத நிலை' எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும். 'நினைப்பற நினைந்தேன்' என்னும் இவ்வரிய தொடரின் அருமைப் பாட்டை மிகவும் வியந்து, கவிஞர்கள் பலர் இதனைத் தத்தம் கவிதைகளில் தழுவிப் போற்றிக் கொண்டுள்ளனர்.

(9) 'நீ அலால் பிறிது மற்று இன்மை' என்னும் தொடர், இறைவன் இவ்வுலகப் பொருள்கள் எல்லாமாகவும் விளங்கும் தன்மையை உணர்த்துகின்றது. "எல்லாம், சிவன்என்ன நின்றாய் போற்றி" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ஞானிகள் இவ்வுலகப் பொருள்களை எல்லாம் சிவமயமாகவே காண்பர். எவ்விடத்திலும் எல்லாப் பொருள்களிலும் சிவத்தைக்காண்பதும் எல்லாவற்றையும் சிவமயமாகவும் சிவச்செயலாகவும் கொள்வதும், ஞானிகளின் இயல்பு. இந்நிலையினை எய்தும் தன்மையே ஞானப் பேற்றிற்கும் அறிகுறியாகும்.

"பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர்
பரமே பார்த்திருப்பர்;
பதார்த் தங்கள் பாரார்...
சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்"

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளுக்கு ஏற்ப, மாணிக்க வாசகர் எல்லாம் சிவமயமாகக் காணும் நல்லாராக விளங்கப் பெற்றதனை 'நீ அலால் பிறிது மற்று இன்மை' என்னும் தொடர், தெளிவுறப் புலப்படுத்துகின்றது.

(10) 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து' என்னும் தொடர், இப்பாடலில் மிகமிக முதன்மை வாய்ந்த ஒருசிறந்த தொடராகும். இதற்குப் பலவகையில் பொருள்கள் கொள்ள வாய்ப்புண்டு ‡

(அ) அவைகளுள், இவை இறைவன் மிக மிக நுண்ணியனு தலை உணர்த்துகின்றன என்பது ஒரு கருத்து.

(ஆ) ஆன்மாக்கள் படிப்படியாக வெவ்வேறு பிறவிகளையும் நிலைகளையும் அடைந்து, முடிவில் இறைவனை அடைகின்றன என்பதனை உணர்த்துகின்றது என்பது, பிறிதொரு கருத்து.

(இ) 'சென்று சென்று' என்பது, உயிர்களின் உலகப் பற்று நிலையையும், 'தேய்ந்து தேய்ந்து' என்பது உயிர்களின் இறையருட் பற்று நிலையையும் குறிப்பதாகவும், இவற்றைக் கொள்ளுதல் கூடும்.

(ஈ) இனி, உயிர்களின் மலப்பிணிப்பு நிலையில், இறைவன் உயிர்களின் பின்னே சென்று சென்று, 'புறம் புறம் திரிந்த செல்வமே' என்றாற் போல ஆட்கொள்ளுகின்றான்; அருள் பெற்ற நிலையில் உயிர்கள் இறைவனின் பின்னே செல்லத் தலைப்பட்டுத் தம்முடைய குற்றங்கள் எல்லாம் தேய்ந்து தேய்ந்து

---

‡"Words do not have either - or meanings in imaginative and philosophical poetry: they have and - and - meanings. That is how poetry works". Prof Hilary Corke.

இதுவா? அன்றி மற்று அதுவா?
  என்பதில்லை; இயல்நலங்கள்
பொதுளும் சிறந்த கவிதையொன்றின்
  பொருட்டிறனுக்கோர் எல்லையுண்டோ?
இதுவும் அதுவும் உதுவுமன்றி,
  இயைந்த எதுவும் ஏற்கும் என்றே,
மதிநலஞ்சால் அறிஞர்எலாம்
  மன்ற உணர்ந்து மொழிகுவரே.

— (தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்.)

ஒழிய, உய்தியும் உயர்வும் பெறுகின்றன. இந்த உண்மையையும், இத்தொடர் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

(உ) உயிர்கள் தூலதேகம், சூக்குமதேகம், காரணதேகம் என்பனவற்றிலெல்லாம் சென்று சென்று, அணுத்தன்மை இத் தகையதென்று அறிந்து அழுந்தி, சிவபோதமும் கன்ம நுகர்ச்சி யும் ஆகியவை தேய்ந்து தேய்ந்து குறைந்தொழிய, சிவபரம் பொருளோடு ஒன்று சேரும் நிலையை, இத்தொடர் குறிப்பிடு கின்றது எனவும், நாம் கொள்ளுதல் அமையும்.

(ஊ) கானல்நீரைக் கண்டு மயங்கி இங்கும் அங்கும் ஓடி அலையும் மான் கூட்டம்போல, இன்பம் என்று எவ்வெவற்றையோ பிறழ உணர்ந்து பெருமயக்குற்று, உயிர்கள் அலைந்து திரியும் இயல்பினைச் 'சென்று சென்று' என்றும்; பின்னர் அவைகளே தாம் இன்பமெனக் கருதிய பொருள்கள் துன்பமாதலை அனுப வித்து உணர்ந்து, தாம் அவற்றின்பாற்கொண்ட அவாவும் பற்றும் முறைமுறையே கழியப்பெறுதலைத் 'தேய்ந்து தேய்ந்து' என்றும் குறிப்பிட்டதாகக் கொள்ளுதலும் பொருந்தும். சென்று சென்று திரிதல் 'ஆரா இயற்கை அவா'; தேய்ந்து தேய்ந்து கழிதல் 'அவா நீத்தல்' அந்நிலையே பேரா இயற்கை பெறுதல் 'ஒன்றுதல்' எனக் கொள்ளுதல் பொருந்தும்.

(11) 'ஒன்றும்' என்னும் சொல், சிவனே என்னும் விளிச் சொல்லுடன் இயைபும். இங்கு ஒன்றுதல், ஒப்பற்ற பொரு ளாதலையும், இரண்டறக் கலந்து அத்துவிதமாதலையும் உணர்த்தும். 'ஒன்றலா ஒன்றுல் உளதாகி' எனவரும் சிவஞான போதத்தால், 'ஒன்று' என்பது, கடவுளுக்கே உரிய சிறப்புப் பெயராதல் அறியலாம்.

(12) 'திருப்பெருந்துறை' என்பது இங்கு அப்பெயர் கொண்ட தலத்தை மட்டும் குறியாமல், 'வேத நெறி' தழைத் தோங்க மிகு சைவத்துறை விளங்க' என்றபடி, சைவ சமயம் அல்லது சைவ சித்தாந்தம் ஆகிய அருள் நெறிப் பெருந்துறை யினைக் குறிப்பாகக் கொள்வதும் உண்டு. இப்பாடலைக்கொண்ட இத் திருப்பதிகம், திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பெறாமல், தில்லையிலேயே அருளிச் செய்யப்பெற்றதாகத் தெளிந்து, 'கோயிற்றிருப்பதிகம்' எனப் பெரியோர்களால் வழங்கப்பட்டு வருவதும் இங்கு நாம் நினைவு கூரத்தக்கது.

(13) 'ஒன்றும் நீ அல்லை' என்னும் தொடர், இறைவன் உயிர்ப் பொருள் உயிரல்பொருள்களில் எல்லாம் கலந்து நிற்பி னும், அவற்றினுள் ஒன்றாகாமல், அவற்றை யெல்லாம் கடந்து

அதீத நிலையனும் அப்பாற்பட்டு நிற்பது என்பதனை உணர்த்திற்று.

(14) 'நீ அன்றி ஒன்று(ம்) இல்லை' என்னும் தொடர், உடலுக்கு உயிர் போல நின்று இறைவன் உலகை இயக்கினலன்றி உயிர்ப் பொருள் உயிரில் பொருள் ஆகிய எவையும் தாமே இயங்கும் ஆற்றல் உடையன அல்லாமையைப் புலப்படுத்திற்று.

(15) இங்கு 'அல்லை' 'இல்லை' என்ற சொற்களின் குறிப்பு மிக நுட்பமானதாகத் திகழ்கிறது 'அல்லை ஈது அல்லை ஈது' என மறைகளும் இறைவனை அண்மைச் சொல்லினலேயே துதிக்கும். 'இன்மை' என்னும் சொல் இல்லாமையை உணர்த்தாமல், முனைத்து நில்லாமை அல்லது விளங்கித் தோன்றாமையை உணர்த்துவதாகக் கொள்ளுதல் வேண்டும். 'யாவையும் சூனியம் சத்தெதிர்' என்னும் சிவஞானபோதவுரை காண்க.

(16) 'ஆர்உன்னை அறிய கிற்பார்?' என்றது, உயிர்கள் தம்முடைய சுட்டறிவினுல் இறைவனை அறிதல் இயலாது என்பதும் யானையின் துணைகொண்டே யானையின் மீது ஏறவேண்டுவது போல, இறைவனை அறிதற்கு அவனுடைய அருளையே துணையாகப் பற்றல்வேண்டும் என்பதும் உணர்த்திற்று. 'தன்னறிவு அதனுற் காணும் தகைமையன் அல்லன் ஈசன்' என்பது சிவப்பிரகாசம்.

சான்ருேர் போற்றுரை:

இங்ஙனம் எண்ணி எண்ணி உணருந்தோறும் நுண்ணிய பல பொருள்களை உணர்த்தி நிற்பதனுல், இவ்வரிய இனிய இணையற்ற பாடலின் சிறப்பைச் சான்ருேர்கள் பலரும் உவந்து போற்றியுள்ளனர். சைவ சித்தாந்தப் பெருஞ் சான்ருேராகிய உமாபதி சிவம்,

"சென்று சென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
என்றிறை யியற்கை யியம்புதல் தகுமே"

எனத் தாம் இயற்றிய சங்கற்ப நிராகரணம் என்னும் தத்துவப் பெருநூலில், இத்திருவாசகச் செய்யுளை மேற்கோளாக, இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துக் காட்டிப் போற்றியிருத்தல் காணலாம். அவ்வாறே வேதாந்த சித்தாந்த

சமரச ஞானப் பெருஞ் செல்வராகிய தாயுமான சுவாமிகள் அவர்களும்,

நினைப்பறவே தான் நினைந்தேன் என்றநிலை நாடி
அனைத்துமாம் அப்பொருளில் ஆகும்நாள் எந்நாளோ? (1)

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாகி
நின்றுவிடும் என்றநெறி நிற்கும்நாள் எந்நாளோ? (2)

என்று இத் திருவாசகப் பாடலைக் குறித்துத் தம்முடைய திருப் பாடல்களில் விதந்து வியந்து புகழ்ந்து போற்றி யிருத்தலும் இங்கு நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

முடிவுரை :

இங்ஙனம் சான்றோர்கள் எல்லாரும் போற்றி ஓதி மகிழ்ந் திருத்தல் ஒன்றே திருவாசகத்தின் தன்னிகரற்றபெருஞ்சிறப்பை உணர்த்துதற்குப் போதிய சான்றாகும். ஆயினும் இத்தகைய சிறந்த திருவாசகத்தையும் ஒரு சிலர்எளிதாக எண்ணிப் பேசுவர். அதனால் திருவாசகத்திற்கு ஓர் இழுக்கும் இல்லை. திருவாசகத்தை ஓதியும் ஒரு சிறிதும் உருக்கம் அடையாத நெஞ்சம் உடையவர்கள் இருக்கநேருமாயின், அது திருவாசகத் தின் குறையாகாமல், அவர்களின் பண்படாத மனஇயல்பினையே உணர்த்துவதாகும். [1] ஏனெனில்,

---

1 "Modern works have to pass before the bar of taste of successive generations; whereas, with classics which have been through the ordeal, almost the reverse is the case. Your taste has to pass before the bar of the classics. That is the point. If you differ with a classic, it is you who are wrong and not book.

—Arnold Bennett.

Literary Taste, How to Form it.

மலரினும் மென்மை கவிதை;சில ரே அதன்
செவ்வி தலைப்படு வார்.

என்பது, அறிஞர்கள் அனைவரும் கண்டறிந்த உண்மை.[2]

திருவாசகத்தினை இராமலிங்கர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர், தாயுமானவர் போன்ற, எத்துணையோ பல்லாயிரக் கணக்கான மாபெரும் சான்றோர்களும், அருளாளர்களும் போற்றி ஓதி உய்ந்துள்ளனர், என்னும் உண்மையினை நாம் நூல்கள் வாயிலாக அறிகின்றோம். எனவே. அத்தகைய அருட் பெருஞ்சான்றோர்கள் பலசின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, நாமும் திருவாசகச் செந்தமிழ் மாமறையினை இடையருது ஓதி, இறையருள் பெற்று உய்யமுயலுவோமாக.

(வெண்பா)

உள்ளம் உருக்கி உணர்வைச் சிவம்ஆக்கும்
தெள்ளு தமிழ்த்திரு வாசகம் தான்மெள்ளமிக
நம்மை மலம்கெடுத்து, நன்மையெலாம் எய்துவித்துச்
செம்மையுறு விக்கும் தெளி !

—ந. ரா. மு.

---

2 " The millions are awake enough for a physical labour but only one in a million is awake for effective intellectual exertion, only one of a hundred millions to a poetic rapture or Divine life".

—Henry David Thorean.

Where I lived and what I lived for.

சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

(மலர் 35. இதழ் 3. பக்கம் 130 இன் தொடர்ச்சி)

உற்றெழு மரங்க ளாதி
    உயிரின்றிப் பூத ரூபம்
பற்றிஇப் பாரின் மீது
    பாங்கிளுற் பலவு மாகிப்
புற்றொடு மயிர்கொம் பாதி
    போலவே தோன்றி மாயும்;
மற்றுள யோனி கட்குப்
    பயன்என வழங்கு மன்றே. 91

இதன் தெளிபொருள்

அண்டசம், (முட்டையில் தோன்றுவன,) சுவேதசம், வெயர்வையில் (அழுக்கில்) தோன்றுவன, உற்பிசம் (வித்து, வேர், கிழங்கு இவற்றைப் பிளந்துகொண்டு மேல்நோக்கித் தோன்றுவன), சராயுசம் (கருப்பத்தில் பையிற் கிடந்து பின் குழவிகளாய்த் தோன்றுவன) என்னும் நால்வகைத் தோற்றத்துள் உற்பிசங்களாகிய தாவரங்கள் உயிருடையன அல்ல 'அவையும் ஏனையபோலத் தோன்றி வளர்ந்து அழிகின்றனவே' எனில் அத்தோற்றமும், வளர்ச்சியும் அழிவும், புற்று, மயிர், விலங்குகளின் கொம்பு முதலியவற்றின் தோற்றம் முதலியன போலப் பூதங்களாகிய சடப்பொருட் பகுதிகளின் சேர்க்கை, பிரிவு என்பவற்றால் ஆவனவேயாம். ('புற்றுக்கு உயிர் இல்லை' என்பது எல்லார்க்கும் உடன்பாடு. மயிர், கொம்பு முதலியவற்றை அறுத்தால் குருதி வெளிப்படாமையாலும், அவற்றை உடைய உயிர்கட்கு அப்பொழுது நோய் நிகழாமையாலும் அவையும் உயிருடையன அல்ல என்பது அறியப்படும் என்பதாம்)

தாவரங்கள் உயிர் அல்லவாயின், அவை தோன்ற வேண்டுவது என்னை' எனின், அவற்றுக்குக் கன்மம் இல்லாவிடினும், அண்டசம் முதலிய ஏனை மூவகைப் பிறப்பின் உள்ள உயிர்கட்கு உள்ள கன்மங்களால் அவ்வுயிர்கட்கு நுகர்ச்சியாதற் பொருட்டு அவை தோன்றி வளர்ந்து அழிகின்றன.

விளக்கம்

கன்மம் பௌத்தர்கட்கும் உடன்பாடாதல் பற்றி. அதனை ஆற்றலாற் பெற வைத்தார். உற்று-உலகத்திற் பொருந்தி. (28)

கொன்றிடல் ஆகா தென்றும்;
  கொன்றவை கொண்டு நாளும்
தின்றிடல் ஆகும்; மண்ணோ
  டொத்திடும் செத்த எல்லாம்;
ஒன்றிய வாசம் ஊட்டி
  உண்ணும்நீர் வைத்த வர்க்கோ
சென்றுநின் றுண்ட வர்க்கோ
  புண்ணியம்? செப்பி டாயே. 92

இதன் தெளிபொருள்

தண்ணீர்ப் பந்தல் முதலிய இடங்களில் பிறர் பொருட்டுத் தண்ணீரை நல்லவகையில் பருகுமாறு அமைத்துவைத்தவர்க்குப் புண்ணியம் உண்டாகுமா, அல்லது அங்குச் சென்று அந்தத் தண்ணீரைப் பருகினவர்க்குப் புண்ணியம் உண்டாகுமா? சொல். (வைத்தவர்க்கே புண்ணியம் உண்டாகும்; பருகினவர்க்குப் புண்ணியம் உண்டாகாது என்று நீ அறிந்திருத்தல்வேண்டும், ஓர் உயிரைக்கொன்று அதன் உடலை ஒருவன் பக்குவப்படுத்திக் கொடுத்தால், கொன்றவனுக்கே பாவம் உண்டாகுமல்லது, அவ்வூனை உண்டவனுக்குப் பாவம் உண்டாகாதுஎன்று அறிதல் வேண்டும். ஆகையால்,) யாதோர் உயிரையும் எப்பொழுதும் ஒருவன் தான் கொல்லுதல் கூடாது. வேறொருவன் கொன்று அதன் ஊனைக்கொடுத்தால், விலைகொடுத்தோ, பிறவகையிலோ வாங்கி உண்ணலாம்; அதனால் உண்டவனுக்கு ஒருநாளும் பாவம் உண்டாகாது மேலும், எந்த வகையிலோ உயிர்கள் இறந்தால் அவற்றின் உடம்புகள் மண் முதலியனபோலச் சடமாய் ஒழிதலன்றிச் சித்தாய் நில்லாமையும் கருதத்தக்கது.

விளக்கம்

இச்செய்யுளின் பிற்பகுதி ஒட்டணி, இதனையே முதலில் வைத்து உரைக்க "நாளும் தின்றிடல் ஆகும்" என்பதன் கருத்துப் பற்றி இவ்வாறு உரைக்கப்பட்டது. "செத்த" என்னும் பெயரெச்சம் காரணப் பொருட்டாய் நின்று, 'செத்ததனால் உண்டானவையெல்லாம்' எனப் பொருள்படுமாறு காரியப் பெயர் கொண்டது. 'செத்த எல்லாம் மண்ணோடு ஒத்திடும்' என்றது வேறும் ஓர் முறைமை கூறியவாறு.

இதனால், 'கொல்லுதலே பாவமாம்; புலால் உண்டல் பாவம் ஆகாது' என அவர் கூறுமாறு கூறப்பட்டது.

இங்ஙனம் இதுகாறும் பிற மதங்களை அவர் மறுக்குமாறு கூறி இரண்டு செய்யுட்களால் அவர் தம் மதத்தை நிறுவுமாறு கூறுகின்றார். (29)

(தொடரும்)

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
இருபத்தாறாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் இராட்சசஆண்டு பங்குனித்திங்கள் 28ஆம் நாள் (10—4—1976) சனிக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ தையல்நாயகியம்மை உடனுறை ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். அவ்வமயம் வேளூர்த் திருப்பதிகப் பாராயணமும், விரிவுரையும் நிகழ்த்தப்பெறும். வேளூர்த் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிடப்பெற்று வழங்கப்பெறும். அன்பர்கள் கலந்துகொண்டு வழிபட்டு இன்புறுவார்களாக.

பன்னிரண்டாம் திருமுறை - திருத்தொண்டர் புராணம் உணர்த்தும் இலக்கியக் கொள்கை*

முப்மொழிக்கொண்டல்,
பேராசிரியர்,
திரு. பெ. திருஞானசம்பந்தம் எம். ஏ., எல் டி.

'ஆற்றலுள்ள உணர்ச்சிகள் தாமே பொங்கி வழியும்போது வெளிப்படும் கலைப்படைப்பே கவிதை' என்று வேர்ட்ஸ்வொர்த் என்ற கவிஞன் கூறினான். இதைத்தான் ஆனந்தவர்த்தனர் வால்மீகி ராமாயணம் எழுந்த விதத்தைக் குறிப்பிடுகையில் 'கிரௌஞ்சப்புள் வேடனால் கொல்லப்பட்டபோது வால்மீகி உணர்ந்த சோகரசம் சுலோகமாக[1] உருவெடுத்தது' என்பர். சேக்கிழார், தமக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த சிவனடியார்களின் அன்புநெறியின் பெற்றியை எண்ணும்தோறும், ஆற்றலுள்ள உணர்ச்சிகள் அவர் உள்ளத்திலே பொங்கின. அவையே திருத்தொண்டர் புராணம் என்னும் கலைப்படைப்பாக உருப்பெற்றன. பண்சுமந்த விருத்தப் பாடலிலே அமைந்தது அவர் படைப்பு.

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவனே என்றும், சகலாகம பண்டித தெய்வச் சைவா என்றும், சைவப் பயிர் தழையத் தழையும் புயலே என்றும் இன்னும் பலவாறாக மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பாராட்டப் பெற்றவர், தொண்டை நன்னாட்டு வேளாளர்குல திலகரும் சேக்கிழார் குடிப்பிறந்தவருமான அருண்மொழித்தேவர்.

அன்றைய நாட்டுச் சூழ்நிலை, அநபாயன் என்ற சிறப்புப் பட்டத்தால் குறிக்கப்படுகின்றவன் இரண்டாம் குலோத்துங்கன். அவனே கோகர்ணக் கல்வெட்டில் பேரம்பலம் பொன்வேய்ந்த

---

* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் 25—6—'75 அன்று நிகழ்ந்த தமிழ் இலக்கியக் கொள்கை எட்டாவது கருத்தரங்கில் படிக்கப்பெற்றது.

1 வால்மீகி ராமாயணம் 1, 2, 15.

கோராசகேசரி வர்மரான இரண்டாங் குலோத்துங்க சோழ தேவன் என்ற அடிப்படையில் அவர் ஆண்ட (1133 - 1150) ஆண்டளவிலே அமைச்சராக இருந்த சேக்கிழார் இந்நூலை அரங்கேற்றினர் என்று திரு. மு. அருணசலம் அவர்கள் 'சேக்கிழார்'2 என்னும் தம் நூலில் கூறியிருக்கிருர்.

தம் அரசரிடத்துத் தாம் கொண்டுள்ள அன்பை, அதைக் காட்டிலும் சைவநெறி தழைத்தோங்க அவன் ஆற்றிவந்த அருந் தொண்டை நன்றியுடன் நினைவு கூர்வார்போல, 'மன்னு சீர நபாயன் வழிமுதல்' 'சென்னி அபயன்குலோத்துங்கச்சோழன் தில்லைத்திருவெல்லை, பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு என்றும் புவிகாக்கும், மன்னர் பெருமான் அநபாயன்' என்று இவ்வாருகப் பத்து இடங்களில் அவன் சிறப்பிக்கப்படுகிருன்.

சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத்தொகை தொகை நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி வகை நூலாகவும் இருப்ப, திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிய இந்நூல் பெருங்காப்பிய இலக்கணத் திற்கேற்ப இரு காண்டங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும் பிரிக்கப்பெற்று 4253 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது என்பது உமாபதி சிவாசாரியர் தமது திருத்தொண்டர் புராண வரலாற்றில்தருகின்ற செய்தி 3 இத்தொகை வகை நூல்களன்றி மூவர் தேவாரம், அம்மையார் திருப்பதிகங்கள் முதலியனவும், பழங்கல்வெட்டுக்களும் சாசனங்களும், ஆங்காங்கு கேட்டறிந்த செய்திகளும் இவர் இயற்றிய நூலுக்கு அடித்தளமாக அமைந்தன.

காவிய பிரகாசம் என்ற வடமொழி அணிநூலின் ஆசிரியரான மம்மடர், ஒருவன் கவிஞனுவதற்குரிய காரணங்கள் மூன்று என்பர். (1) கவிதை இயற்றக்கூடிய இயல்பான சக்தி - இது பிரதிபை என்றும் கூறப்படும் (2) உலகியல் அறிவு, முன்னோர் அருளிய சாத்திரங்களையும் காப்பியங்களையும் கற்றுத் தெளிந்தமையால் ஏற்படும் நுட்பமான அறிவு. (3) புலவர்களுடன் நீண்ட பயிற்சி 4 ஆகியவை அக்காரணங்கள்.

சேக்கிழாருடைய பாடல்களைப் பார்க்கும்போது கவிதை அவருக்குக் கைவந்த கலை என்பது தெள்ளிதின்புலனுகும். கவி

---

2 சேக்கிழார் - மு. அருணசலம், ப. 54.

3 திருத்தொண்டர் புராண வரலாறு, 53.

4 காவ்ய பிரகாசம் - மம்மடர், 1. 3.

பிரதிபை அல்லது genius for Poetry - என்பது அவரிடத்தில் அமைந்திருப்பதை அவர் நூலை ஊன்றிப் படிக்கும்போது நாம் உணர்கிறோம்.

அவருடைய உலகியல் அறிவு பரந்து விரிந்த ஒன்று என்பது அவர் அமைச்சராக இருந்த ஒரு காரணத்தினாலேயே பெறப்படும். அறுபத்து மூவர்களும் அரசர், அந்தணர், வேளாளர், வணிகர், வேடர், புலையர் ஆகிய சமுதாய நிலையின் பல்வேறு நிலைகளில் உள்ளவரின் வாழ்வியலை நுண்ணிதின் அறிந்து செஞ்சொற்களில் வடித்துத் தரும் இடங்களில் அவரது உலகியல் அறிவைக் காணலாம். எடுத்துக்காட்டாக, மழைக்கு அதிபதியாய் மருதநிலக் கடவுளாய், உழவிற்குத் துணைவனாய் இருக்கும் இந்திரனை வணங்கிய பின்னரே, காவிரி நாட்டு மக்கள் நாற்று நடத் தொடங்குவர் என்ற செய்தியை 'உழுது சான்மிக ஊறித் தெளிந்த சேறு'5 என்று தொடங்கும் திருநாட்டுச்சிறப்புப் பாடலில் பார்க்கிறோம். முருகநாயனார் வரலாற்றில் பூக்களைத் தொடுக்கும் வேறுபாட்டால் மாலைகள், கோவை, கண்ணி, மாலை, பிணையல், தொடையல் 6 என்ற பலதிறத்தன என்பதை அறிகிறோம். அவருடைய நூலிலே சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையும், தருக்கநூல் முறைகளையும், அர்த்த சாத்திர நெறிகளையும், போர்முறை பற்றிய செய்திகளையும் இன்னோரன்ன பிறவற்றையும் நோக்கும்போது ஆசிரியரின் உலகியல் அறிவும் சாத்திர அறிவும் புலனாகின்றன.

திருக்குறள், சிலப்பதிகாரம், மூவர் பாடல் முதலானவற்றுள் இவருக்கு உள்ள பயிற்சியை இந்நூலுள் காணலாம். எடுத்துக்காட்டாக, 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்னும் குறள், மூர்த்தி நாயனாரை அறிமுகப் படுத்தும்போது, 'எப்பற்றினையும் அறுத்து ஏறுகைத்தேறு வார்தாள். மெய்ப்பற்றெனப் பற்றிவிடாத விருப்பின் மிக்கார்' 7 என்ற வரிகளில் எதிரொலிப்பதைப் பார்க்கிறோம். 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்ற புறப்பாட்டின் வரியை உளத்தில் கொண்டு, 'அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமற் காத்து' 8 என்று மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில்

---

5 திருத்தொண்டர் புராணம் – திருநாட்டுச் சிறப்பு, 62.

6 திருத்தொண்டர் புராணம் – முருகநாயனார், 9.

7 திருத்தொண்டர் புராணம் – மானக்கஞ்சாறர், 8.

8 திருத்தொண்டர் புராணம் – மெய்ப்பொருள், 2.

பாடியுள்ளார். சண்டேசுர நாயனர் வரலாற்றில் திருச்சேய்ஞலூர் அந்தணர் ஒழுக்கத்தை, 'செம்மை வெண்ணீற்றொருமையினர் இரண்டு பிறப்பின் சிறப்பினர்' 9 என்று தொடங்கும் எண்ண லங்காரம் அமைந்தபாடலில் அழகுறக்காட்டுகிருர். 'இது ஒன்று புரிகொள்கை இரு பிறப்பாளர்' என்று தொடங்கும் சிலப்பதி கார வரிகளை நினைவில் கொண்டு எழுதியதாகக் கொள்ளலாம்.

'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல' அவதரித்த ஞானசம்பந்தரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட சேக்கிழார் அவர் சொற்களைத் தம்பாடலில் பொன்னே போல் பொதிந்து மேலும் மெருகூட்டித் தந்திருக்கிருர். 'மங்கை யர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கை மடமானி' என்ற தொடரை 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் வளவர் திருக்குலக்கொழுந்து வரிவளைக்கை மடமானி' 10 என்று மங்கை யர்க்கரசியாரிடம் தான் கொண்டுள்ள பக்தியைப் பெருமதிப்பை தனக்கே உரிய காவிய நயத்துடன் புலப்படுத்தியுள்ளார்.

சேக்கிழார் காலச் சூழ்நிலையை யொட்டிக் காணும்போது அவர் வடமொழிக் காப்பியங்களையும் பயின்றிருக்கக்கூடும் என்று எண்ண இடமுண்டு. கன்னியாம் சங்கிலியாரைச் சுந்தரர் கண்ட நிலையில் 'கோவா முத்தும் சுரும்பேருக் கெழுமென் முகையும் அனையாரை' 11 என்று சேக்கிழார் பாடுகிருர். துஷ்யந்தன் சகுந்தலை என்னும் கன்னியைச் சந்தித்தபோது 'இவள் துளைக் கப்படாத ரத்தினமோ, முகரப்படாத மலரோ' 12 என்று கருது வதாகக்காளிதாசன்வருணிக்கின்முன். திருவொற்றியூர்க்கோயில் கோபுரத்தை 'வானை அளக்கும் கோபுரம்' 13 என்று சேக்கிழார் கூறும்போது காளிதாசன் 'இமயமலை உலகளக்கும் கோலை ஒக்கும்' 14 என்ற கூற்று நினைவிற்குவருகிறது. காளிதாசனும் ஒரு சிவ பக்தன் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது அவன் காவியங்களைச் சேக்கிழர் பயின்றிருப்பரோ என்ற எண்ணம் எழுகிறது.

---

9 திருத்தொண்டர் புராணம் – சண்டேசுவரர், 2.

10 திருத்தொண்டர் புராணம் – மங்கையர்க்கரசியார், 1.

11 திருத்தொண்டர் புராணம் – ஏயர்கோன் கலிக்காமர், 227.

12 அபிக்ஞான சாகுந்தலம், 2. 10

13 திருத்தொண்டர் புராணம் – ஏயர்கோன் கலிக்காமர், 203.

14 குமாரசம்பவம் – காளிதாசர், 1-1.

சேக்கிழார் சான்றோருடைத்தான தொண்டை நாட்டில் தோன்றியவர். பொய்யடிமையில்லாத் புலவரைப் போற்றியவர். திருவொற்றியூர் மண்டபங்கள் இடைவிடாமல் ஓதப்படுகின்ற திருப்பதிகங்களின் இசைப்பாட்டுக்களை உடையன என்றும், காஞ்சியில் அரசு புரிந்த ஐயடிகள் காடவர்கோன் வடமொழி தென்மொழி முதலாகிய கலைஞானங்களில் வல்லவர் 15 என்றும் சேக்கிழார் சொல்வதனின்றும் வடமொழி வாணர்களும் முத்தமிழ்ப் புலவர்களும் மலிந்த நாடு தொண்டை நன்னாடென்றும் அவர் தம் காலத்துக் கவிஞர்களோடு அளவளாவி தம் புலமையைப் பெருக்கிக் கொண்டார் என்றும் கருத இடமுண்டு.

ஆகசேக்கிழாரின்பழுத்ததமிழ்ப்புலமைக்குமம்மடர்கூறியுள்ள மூன்று காரணங்களும் பொருந்துவன என்பதைக்கண்டோம்.

'அடியார் பெருமையும் அருமையும் நாளும் அறியும் அம்பல வாணர் அவர் வரலாறு விரித்துரை செய்பவர் ஆர்' எனத் திருவுளத்தே கருதி, அறுபத்து மூன்று சிவனடியார்கள், ஒன்பது தொகையடியார்கள் ஆகியவரின் அன்பு அவ்வளவையும் தம் திருவருட் கண்ணால் சேக்கிழார் காணும்படி உணர்த்தி, 'உலகெலாம்' என்று அடி எடுத்துக்கொடுக்க, அருண்மொழித் தேவரால் கவிநலம் மிக்கதோர் பெருங்காப்பியமாகப் பாடப் பெற்றது திருத்தொண்டர் புராணம்.

அநபாய சோழர் அடியவரின் அந்தத் 'தூய கதை அடைவு படச்சொல்வீர்' எனவும், சேக்கிழார் தில்லைவாழந்தணர் முதல் திருநீலகண்டத்து யாழ்ப்பாணர் ஈறாக உள்ள அடியார் வரலாற்றைத் திருத்தொண்டத் தொகையிலும் திருத்தொண்டர் திருவந்தாதிலும் கூறப்பட்ட தொடர்ச்சியை விரித்துரைத்தார். விரிவுரையைக் கேட்ட வேந்தன் 'ஒப்பரிய பொருள் தெரிந்து விளங்கித் தோன்ற, உவமை உடைத்தாய கதை கற்க, நிற்க, தப்பில் பெருங்காவியமா விரித்துச் செய்து தருவீர்' என்று வேண்ட, சேக்கிழார் 'செந்தமிழ்த் தொடையால் விளங்கிய திருவிருத்த நிருத்தனர் தந்த சொன் முதலா வெடுத்தனர் கானுவான புராண நூல். 16 நூலை முடித்து அதற்கு 'திருத்தொண்டர் புராணம்' என்று பெயர் சூட்டினர்.

அரசன் பெருங்காவியமாக விரித்துச் செய்து தரும்படிக் கேட்க, புலவர் திருத்தொண்டர் புராணத்தைத் தந்தார் என்பது முரணாகத் தோன்றலாம். வடமொழி இலக்கியத்தில் புராணம்

---

15 திருத்தொண்டர் புராணம் - ஐயடிகள் காடவர்கோன், 3.

16 சேக்கிழார் புராணம் 35.

நண்பனைப்போல் அறிவுரை வழங்கும் என்றும், காவியம் மனைவி போல் கனிவு மொழியால் அறிவுரை வழங்கும் என்றும் வேறு படுத்திக் காண்பர். உள்ளுறைப் பொருள் ஒன்றுயினும் அதை வெளியிடும் முறை பற்றியே இவ் வேறுபாடு.

பாகவத புராணம், ஸ்கந்த புராணம் போன்றவை அடியார் ஆண்டவன் பெருமையை விரித்துரைப்பன. அதுபோல் திருத்தொண்டர் புராணமும் எழுபத்திரண்டு அடியார்கள் பெருமைகளைப்பேசுவன. தொண்டர்களின் அன்பின் திறன் எந்த அளவுக்குப் பேசப்படுகிறதோ அந்த அளவிற்குப் புராணராகிய சிவபெருமான் அருட்டிறமும் பேசப்படுவதால், மாளவிகை அக்னி மித்திரர் ஆகிய நாயகிநாயகர் இருவருடையபெயரையும் சேர்த்து மாளவிகாக்னிமித்ரம் என்று கூறும் வண்ணம் திருத்தொண்டர், புராணர் என்ற இருவரின் பெருமையைப் பேசும் இந்நூலுக்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்ற பெயர் பொருந்துவதாகுமோ என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

'எடுத்த மாக்கதை' என்றும் 'பெரியபுராணம்' என்றும் இந்நூல் வேறுவகையாக வழங்கப்படுகிறது. ரோஜாவை வெவ் வேறு மொழியாளர் வெவ்வேறு பெயர் கொண்டு அழைத்த போதும் அதன் மென்மையும், பொலிவும், வண்ணமும், மணமும் அனைவரையும் ஈர்த்துப் பரவசமூட்டுவதுபோல, இந்நூலை எப்பெயர் கொண்டு அழைத்தாலும் அதன் ஓசை நயமும், சொல் லழகும், பொருட் செறிவும், உள்ளீடான பக்திச்சுவையும் சுருங்கச் சொன்னால் பெருங்காப்பிய நலன்கள் அனைத்தும் பக்குவமுடை யாரைப் பரவசப்படுத்தத்தான் செய்கின்றன.

திருத்தொண்டர் புராணத்தின் சிறப்பைக் குறிக்கும் வகை யில் மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் 'ஈற்றுத் தலைபொருமவுலி புனைந்தாலென்ன'17 என்று தொடங்கும் பாடலில் 'பாட்டின் முடிவாகிய தலையிடத்தே ஒப்பற்றமகுடத்தை அணிந்தாற் போல மடக்கு என்னும் சொல்லணி பொருந்திப் பொலியவும், உவமை உருவகம் முதலாய பொருளணிகள் ஆங்காங்கு, பெருமையுற்றுப் பொருந்தி விளங்கவும் இழுமென் மொழியில் விழுமியது நுவலும் 'தோல்' என்னும் வனப்பினெடு பொருந்திய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூன்றும் உரிய இடத்தில் அமையப்பெற்றதும், 'ஆற்று நீர்' என்னும் பொருள்கோள் முதலான பொருள்கோள்கள் அமைந்துவிளங்குமாறும் ஆசிரியர் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியுள்ளார் என்று திறனய்வு செய்திருக்கிருர். (தொடரும்)

17. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், 30.

திருநனிபள்ளி (புன்செய்)

திரு. என். இராமகிருஷ்ணு

திருஞானசம்பத்தர் சீகாழியில் ஞானப்பால் உண்டு தேவாரம் பாடினர். அவருடைய பெருமை நாடுமுழுவதும் பரவியது. சீகாழிக்கு அருகில் உள்ள திருக்கோலக்கா என்ற தலத்துக்குச் சென்று பாடினர் சம்பந்தர். பாடும்போது தன் கையால் தாளம் கொட்டிப்பாடினர். இளங்குழந்தையின் கை சிவந்தது; அதைக்காணப் பொறுக்கவில்லை இறைவனுக்கு. சம்பந்தர்கையில் பஞ்சாட்சரம்பொறித்தஇரண்டுபொன்னாலாகிய தாளங்களை அருளினர். அங்கே எழுந்தருளியிருக்கும் அம்பிகை அத்தாளங்களுக்குஇன்னேசை அருளினுள். சத்தனுகிய இறைவன் தாளம்கொடுக்க சத்தியாகிய இறைவி தாளத்தின் சக்தியாகிய ஓசையைக் கொடுத்தருளினுள். இப்போது கோலக்காவைத் திருத்தாளமுடையார் கோயில் என்று வழங்குகின்ருர்கள்.

சம்பந்தப் பெருமானுடைய பெருமையை உணர்ந்த பலர் அவரை வந்து பணிந்து தங்கள் தங்கள் ஊருக்கு வரவேண்டும் என்று வேண்டினர். சம்பந்தருடைய அன்னையார் பிறந்த ஊர் திருநனிபள்ளி, அங்குள்ள பெரியவர்களும் தம் ஊருக்கு வந்து இறைவனை தரிசித்துப் பதிகம்பாடியருள வேண்டும் என்று சம்பந்தரை வேண்டிக்கொண்டனர். அதற்கு இணங்கி ஞானசம்பந்தர் புறப்பட்டார். கை வலிக்குமோ என்று இறைவனுகிய தந்தை தாளம் அருளியது போல இங்கே சம்பந்தரைப் பெற்றெடுத்த தந்தையாகிய சிவபாத இருதயர் குழந்தை நடந்தால் அதன் கால் வலிக்குமோ என்று எண்ணினர். தாமரையின் அகவிதழைப்போல் மென்மையும் அழகும் பொருந்திய திருவடி அது. அது பூமியின்மேல் நடக்க அவர் உள்ளம்இடம்கொடுக்கவில்லை. வேறு ஒருவர் அந்தக்குழந்தையை எடுத்துக்கொள்வதற்கும் மனம் வரவில்லை. தாமே எடுத்துத் தம் தோள்மீது வைத்துக்கொண்டார். அப்போது சம்பந்தர் என்ன செய்தார்? அந்த உயரமான இடத்தில் இருந்தபடியே தலையை நிமிர்த்தி எல்லோரையும் பார்த்து மிடுக்கோடு இருந்தாரா? ஞானப்பால் உண்டவராதலின் இறைவன் திருவடியைத் தன்தலைமேல் வைத்திருக்கும் பாவனையுடன் அமர்ந்திருந்தாராம். இதைச் சேக்கிழார் சொல்லுகிருர்.

" தாதவிழ் பூந்தாமரையின் அகவிதழ்போல்
சீறடிகள் தரையின் மீது
போதுவதும் பிறர்ஒருவர் பொறுப்பதுவும்
பொருஅன்பு புரிந்த சிந்தை
மாதவம் செய் தாதையார் வந்தெடுத்துத்
தோளின்மேல் வைத்துக் கொள்ள
நாதர் கழல் தம்முடிமேல் கொண்டகருத்
துடன்போந்தார் ஞானமுண்டார் "

நனி பள்ளியைக் கண்டவுடன் ஒரு பதிகம் பாடினார். அப்பதிகத்தில் தகப்பனாரின் தோளின்மேல் இருந்தபடியே பாடியது என்பதையும் குறிப்பித்தார்.

அந்தத் திருநனிபள்ளி தஞ்சைமாவட்டத்தில் மாயூரத்திற்கு ஆறு மைல் தொலைவில் இருக்கிறது; புன்செய் என்ற கிராமமாக இருக்கின்றது. இங்குள்ள கோயில் புராதனமானது. நற்றுணை ஈசுவரம் என்பது தலத்தின் பெயர். கல்வெட்டுக்களில் திருநனிபள்ளி உடையார்கோவில் என்றுவழங்குகிறது. கல்வெட்டுக்களில் பழமையானது; பாண்டியன் முடித்தலைகொண்ட கோபரகேசரியான இரண்டாம் ஆதித்தன் காலத்தைச் சார்ந்தது. சண்டேசர் கோயில் இல்லாமல் இருந்தது; இப்போது மகாமண்டபத்தில் உள்ளது. அழகான உருவம். மூலஸ்தானத்தில் உள்ள கல்வெட்டுக்களில் பழமையானதுமுதல் இராஜராஜனுடையது.

கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி. இதன் சதுரமான கருவறையின் பக்க அளவு 24 அடி. அர்த்த மண்டபம் கிழக்கு மேற்கில் 19 அடியும் தெற்கு வடக்கில் 17½ அடியும் உள்ளது. இதன் நடுவில் நான்கு தூண்களும் சுவரை ஒட்டிய நான்கு அரைத் தூண்களும் இதைத் தாங்கி நிற்கின்றன. இரண்டு துவார பாலகர் சிலைகள் உள்ளன.

நனிபள்ளி கொடிவட்டம் சிறப்பானது. அர்த்த மண்டபத்தையும் முக மண்டபத்தையும் இணைக்கும் இடைவெளி 16 அடி 10 அங்குலம் உள்ளது! இதை உருண்டையான கும்பங்களையுடைய நான்குதூண்கள் சுமந்து நிற்கின்றன. முக மண்டபம் மும்முடிச் சோழப் பேரம்பலம் என்று பெயர் பெற்றது. இது முதல் இராஜ ராஜனால் எடுக்கப்பெற்றதாகும். பதினறுதூண்கள் தாங்கி நிற்கின்றன.

தேவ கோஷ்டங்களில் கணபதி, அகத்தியர், தட்சிணாமூர்த்தி திருவுருவங்கள் உள்ளன. தூண்களின் நடுவில் கொடிக்

கருக்குகள் செதுக்கப்பெற்றுள்ளன. இலிங்கோத்பவர், அர்த்தநாரீஸ்வரர், பிரம்ம துர்க்கைகளின் வடிவங்கள் உள்ளன. தேவ கோஷ்டங்களின் மேலுள்ள மகர தோரணங்களில் நடுவில் சிலைகள் உள்ளன. தூண்களின் நடுவிலும், ஓரங்களிலும், கொடிக் கருக்குகள் செதுக்கப்பெற்றுள்ளன. இராமாயண சிற்பங்கள் உள்ளன. கந்தபுராண விளக்கம் இருக்கிறது. இது மிகவும் விசேஷம். பிற கோயில்களில் காண்பது அரிது. கூடுகளால் அணி செய்யப்பட்டுள்ள கொடுங்கையின் கீழே பூத கண வரிசையைக் காணலாம்.

ஆவுடையார்கோயில் கொடுங்கையும், நனிபள்ளி கொடி வட்டமும், திருவீழிமிழலை வௌவால் நத்திமண்டபமும், வனப்பு மிக்க வேலைப்பாடு அமைந்தவை என்பது பிரசித்தம்.

செம்பொன்னார்கோயில் புகைவண்டி நிலயத்திலிருந்து சுமார் இரண்டரைக் கல்லில் திருநனிபள்ளி இருக்கிறது. பஸ் வசதி உண்டு. இறைவன்-நற்றுணையார். இறைவி-பர்வதராஜபுத்திரி.

கோவிலின் உள்ளே அழகான உற்சவமூர்த்திகள் உள்ளனர் கோவில் 1000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. அக்காலத்தில் இந்த இடத்திற்குப் பெயர் ஜயங்கொண்ட சோழவள நாட்டில்உள்ள ஆக்கூர் நாட்டு திருநனிபள்ளி. சாலையின் பெயர் "ராஜசுந்தரவாடி" என்பது. இது திரிபுவனசக்ரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் கல்வெட்டில் காணப்படுகின்றது.

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	ரூ.	6—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	ரூ.	7—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	ரூ.	10—00
ஆயுள் சந்தா	ரூ.	100—00

செயலாளர் :— ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609001.
தஞ்சை மாவட்டம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ சரபமூர்த்திக்கு

சரப வேள்வியும் கோடியருச்சனையும்

ஆணவத்தால் தானே பரம்பொருள் என்று செருக்குற்ற இரணியனைத் திருமால் நரசிங்க வடிவங்கொண்டு அழித்து அவனது குருதியைக் குடித்தார். அதனால் மதங்கொண்டு உலகிற்குத் துன்பம் விளைத்த நரசிங்கத்தை அடக்குவதற்கு சிவபெருமான் எடுத்தவடிவமே சரபத்திருவுருவம். இவர் திருபுவனம் திருக்கோயிலில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் வழங்குகின்றார். சரபமூர்த்தி, பல குடும்பங்களுக்குக் குலதெய்வமாகவும் திகழ்கின்றார். இப்பெருமானை ஞாயிற்றுக்கிழமைகளில்-சிறப்பாக இராகுகால வேளையில் வழிபட்டுப் பலர் பயன்பெறுகின்றனர்.

ஸ்ரீ சரபமூர்த்தியை நினைப்பவர்களும் வழிபடுபவர்களும் பகை நீக்கமும், பாபக்கழிவும் பெறுவதோடு அரசர்களால் ஏற்படும் துன்பம், அகாலமரணம், வலிப்புநோய், சுரநோய், எதிர்பாராதவிபத்து இவை நீங்கப்பெறுவர். இம்மை மறுமை இன்பங்களையும் வெற்றியையும் எய்தி இன்புறுவர் என்று சரப கல்பம் கூறுகிறது.

உலகில் பகையும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்கவும் போர்க்குமுறல் அடங்கி அமைதி நிலவவும் தருமையாதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சரப்பெருமானுக்கு 2—9—73 இல் கோடியருச்சனை தொடங்கியருளினர்கள். கோடியருச்சனையில் 35 ஆவது லட்சார்ச்சனை நடைபெறுகிறது. இவ்வர்ச்சனையில் அன்பர்கள் பலர் பங்குகொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

லட்சார்ச்சனை சரப வேள்வி ஜபம் முதலியவற்றில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகத் தெரிவித்து கலந்துகொண்டு வழிபட்டு உய்வார்களாக.

ஸ்ரீ சரபவேள்வி ஜபம் முதலியவற்றிற்குக் கட்டணம்		ரூ.	250—00
ஏகதின லக்ஷார்ச்சனை 1-க்கு கட்டணம்	....	ரூ.	500—00
பஞ்சமுகார்ச்சனை 1-க்கு கட்டணம்	....	ரூ.	50—00
சகஸ்ரநாமார்ச்சனை 1-க்கு கட்டணம்	....	ரூ.	10—00

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :— பொருளாளர்; ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம் P. O. தஞ்சை மாவட்டம்.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்
ஸ்ரீ ஞானம்பிகை உடனுய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில்

கோடி அருச்சனை

தருமையாதீனம் நானூறு ஆண்டு வரலாற்றுச் சிறப்புடையது. இதனைத் தோற்றுவித்தருளியவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இவர் சிவசமாதி கூடி, அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருவுக்கொண்டு இன்றும் அருள்பாலித்து வருவது தருமபுரத்தில் மேலக்கோயில் என வழங்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்.

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம், சுவாமிக்கும் அம்பாளுக்கும் உலகநலங்கருதி கோடிஅருச்சனை நடைபெறுகிறது. தற்பொழுது நாற்பத்தேழாவது லக்ஷார்ச்சனை நிறைவுபெற உள்ளது. சிவபக்தி குருபக்தி மிக்க அன்பர்கள் பலர் இவ்வர்ச்சனையில் பங்கு கொண்டு வழிபட்டுப் பயன்பெற்றுவருகின்றனர். பலரும் பங்கு கொண்டு உய்திபெறுவதற்கு வாய்ப்பாகக் கீழ்க்காணுமாறு கட்டணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுவாமி அம்பாள் சகஸ்நாமார்ச்சனை இரண்டிற்கும் ரூ. 10—00

முகவரியுடன் கட்டணத்தைப் பணவிடைமூலம் அனுப்பினல் அருச்சனை செய்து பிரசாதங்கள் அனுப்பிவைக்கப்பெறும்.

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :— மானேஜர், தருமையாதீனம், தருமபுரம், மாயூரம் 609001.

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில்

நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள்

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 1—1—76 சாக்கிய நாயனர், 9—1—76 வாயிலார் நாயனர், 21—1—76 சண்டேசுவர நாயனர், 31—1—76 திருநீலகண்ட நாயனர், 2—2—76 அப்பூதி அடிகள், 10—2—76 கலிக்கம்ப நாயனர், 11—2—76 கண்ணப்பநாயனர், 12—2—76 அரிவாட்டாயநாயனர் 18—2—76 எறிபத்த நாயனர், 25—2—76 காரி நாயனர், 29—2—76 கோச்செங்கட்சோழ நாயனர் குருபூஜைகள் நடைபெற்றன. புலவர் திரு. வ. இராசு அவர்கள் பெரிய புராண விரிவுரையாற்றினர்கள். திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்களும், அன்பர்களும் கேட்டுப் பயன் பெற்றனர்.

பாரதப் பிரதமர் அவர்களின்

இருபது அம்சத் திட்டம்

1 அவசியப் பொருட்களின் விலைவாசியைக் குறைக்க தீவிர நடவடிக்கை, உற்பத்தி, கொள்முதல், விநியோக சீரமைப்புத் திட்டம். அரசின் செலவில் சிக்கனம்.

2 நில உச்சவரம்புச் சட்ட தீவிர அமுல், உபரி நிலங்களை ஏழைகளுக்கு விரைவாக வழங்கல், நில உடைமை பற்றிய சான்றுகள் தயாரிக்கப்படும்.

3 நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்.

4 பாட்டாளிகளை அடிமைபோல நடத்துவதும், காண்ட்ராக்ட் முறையும் சட்ட விரோதமாக்கப்படும்.

5 கிராமப்புற மக்களின் கடன் சுமை நீக்கப்படும். நில மற்ற விவசாயத் தொழிலாளர், சிறு விவசாயிகள், கை வினைஞர்கள் – கடன் வசூல்கள் ஒத்திவைக்கப்படும்.

6 விவசாயத் தொழிலாளர் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் மறு ஆய்வு செய்து ஊதியம் உயர்த்தப்படும்.

7 புதிதாக 1-கோடி 20-லட்ச ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி, பூமிக்கு அடியில் உள்ள நீரைப் பயன்படுத்த நாடு தழுவிய பெருந்திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

8 மின்சாரத் திட்டங்கள், ராட்சச அனல் மின் நிலையங்கள் மத்திய அரசின்கீழ் அமைக்கப்படும்.

9 கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள்.

10 சாதாரணமக்கள் அணியும் துணிகளின் தரம் உயர்த்தப் படும், தாராளமாகக் கிடைக்கவும் வழிவகை செய்யப் படும்.

11 நகர்ப்புற மற்றும் நகர்ப்புறமாகக்கூடியபகுதி நிலங்கள் சமூக உடமை ஆக்கப்படும், காலி நில உடமைக்கு உச்சவரம்பு.

12 அரசுக்குத் தெரியாமல் ஏராளமான விலையில் வீடுகள் கட்டுவது, வரி ஏய்ப்புக்களை கண்டுபிடிக்கத்தனிப்படை.

13 கடத்தல்காரர் களின்சொத்துக்களைப் பறிமுதல்செய்தல்.

14 தொழில் முதலீட்டு வரைமுறைகள் தளர்த்தப்படும் இறக்குமதி லைசென்சுகளைத் தவறாகப் பயன்படுத்துவோர் மீதும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15 தொழில்கள் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களும் நிர்வாகத்தில் பங்கு பெற புதிய திட்டங்கள் வகுக்கப் படும்.

16 சாலைப்போக்குவரத்துக்குத் தேசியமட்டத்தில் பெர்மிட் வழங்கும் திட்டம் வரும்.

17 வருமானவரி உச்சவரம்பு 8-ஆயிரமாகத்தளர்த்தப்படும்.

18 விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவசியப் பொருட்கள் கன்ட்ரோல் விலையில் சப்ளைசெய்யப்படும்.

19 மாணவர்களுக்கு நோட்டுக்கள், புத்தகங்கள் மற்றும் இதர பொருட்கள் கண்ட்ரோல்விலையில் வழங்கப்படும்.

20 எல்லா மக்களுக்கும் - குறிப்பாக ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு, பயிற்சி வாய்ப்பை அதிகரிக்க உதவித் தொகை யுடன் கூடிய பயிற்சித் திட்டம் வகுக்கப்படும்.

செய்திகள்

திருக்குவளையில் நெல் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் நெல் மகோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சமயாசாரியர்களில் மூன்றாமவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் குண்டையூர்க் கிழார் இறையருளால் பெற்ற நெல் மலையைப்பற்றி தெரிவித்துக்கொள்ளுதலும்; சுந்தரர் இறைவனிடம் நெல் எடுத்துச் செல்ல ஆள் வேண்டிப் பாடுதலும் இறைவன் ஆணையால் பூதகணங்கள் திருவாரூருக்கு நெல்மலையையெடுத்துச் செல்லுதல் முதலிய ஐதிகங்கள் இவ்விழாவில் இடம் பெற்றன. விழா 15, 16 17–2–76 ஆகிய மூன்று நாட்களில் சிறப்புற நிகழ்ந்தது. விழா நாட்களில் மாலை 6-மணியளவில் திருத்துறைப் பூண்டி திரு. வை. பக்கிரிசாமி செட்டியார் M. A. அவர்களும் திருவாரூர் வித்துவான் திரு சு மு. சுந்தரராசன் அவர்களும், தருமபுரம் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் அவர்களும் முறையே சுந்தரர் பெருமை, சுந்தரர் வரலாற்று அற்புதங்கள்; தியாகேசர் பெருமை ஆகிய தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்கள். பக்தர்கள் விழாவில் கலந்துகொண்டும், வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

திருக்குறுக்கையில் மாசிமக ஏகதின விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குறுக்கை ஸ்ரீ ஞானாம்பிகை உடனுறை ஸ்ரீவீரட்டேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானத்தில் மாசிமக விழா 15—2—76 ஞாயிற்றுக் கிழமை யன்று சிறப்புற நிகழ்ந்தது. அன்று காமதகன மூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் பகலில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாக்காட்சி, திருமுறைப்பாராயணம் நாதஸ்வர இன்னிசை, வாணவேடிக்கைகள் முதலியவற்றுடன் சிறப்புற நிகழ்ந்தது. அன்று மாலை தருமபுரம் குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் அவர்கள் குறுக்கைத் தலச்சிறப்பு என்றபொருளில் விரிவுரையாற்றினர்கள். அன்பர்கள் பலரும் வந்து வழிபட்டும் விரிவுரையைக் கேட்டும் பயன் பெற்றனர்.

மாயூரம் வள்ளலார்கோயிலில் குருப் பெயர்ச்சி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுய ஸ்ரீ வதான்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் குருபெயர்ச்சி விழா 25—2—76 புதன்கிழமை சிறப்பாக நிகழ்ந்தது. குருபகவான் ஆண்டுக்கொருமுறை ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குச் செல்வதை குருப்பெயர்ச்சி என்றுவழங்குவர். மீனராசியிலிருந்து மேஷ ராசிக்குப் பெயர்ந்து செல்லும் விழாவை முன்னிட்டு ஸ்ரீ மேதாதட்சணமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப் பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள். அன்றுமாலை 7-மணி அளவில் தருமையாதீன வேத சிவாகமபாடசாலை ஆசிரியர் சிரோமணி திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் குருப்பெயர்ச்சி பற்றியும் கோள்களின் நிலைகள்பற்றியும் விளக்கமான விரிவுரை நிகழ்த்தினர்கள்.

திருபுவனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 17-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 19—2—76 வியாழக்கிழமை திருபுவனம் சந்நிதி வீதியில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இரு வேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நண்பகலில் மாகேஸ்வர பூஜையும் நடைபெற்றன. குருபூஜை விழாவையொட்டி மாலை 7-மணி அளவில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தருமையாதீனத்தமிழ்ப்புலவர் வித்துவான் சிரோமணி திரு வி. சபேசன் அவர்கள் ' குருமணிகளின் அற்புதங்கள் ' என்ற தலைப்பிலும், ஆடுதுறை உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. வே. மகாதேவன் அவர்கள் ' திருபுவனக் கல்லெழுத்துக்கள் ' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரையைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில்

திருவாசகம் — பெரியபுராண விரிவுரைகள்

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் வாரந்தோறும் திங்கள், சனி ஆகிய நாட்களில் மாலை 6-30 மணி முதல்

8-மணிவரையில் தருமை ஆதீனப்புலவர் திரு. N. R. முருகவேள் அவர்களால் திருவாசக விரிவுரைகள் நிகழ்த்தப் பெறுகின்றன. வகுப்பில், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கண்டபத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, அச்சப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், பிடித்தபத்து, திருவேசறவு முதலிய பகுதிகள் நடைபெற்றன.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10-30 மணி முதல் 12-00 மணி வரையில் திரு. S. சிவகுமார் அவர்களால் பெரியபுராண விரிவுரை நடத்தப்பட்டு வருகிறது. 25—1—76, 1—2—76, 8—2—76, 15—2—76 ஆகிய நாட்களில் திருஞானசம்பந்தர் புராணவிரிவுரை நிகழ்ந்தது அன்று, 'சமயாசாரியர்களில் ஒருவராகிய திருஞானசம்பந்தர் வேதநெறி சைவநெறிகள் விளக்கம் பெற்று மக்கள் உய்யவும் மனிதசமுதாயத்தை நன்னெறியில் ஆற்றுப்படுத்தவும் அவதரித்தார். அவர் வரலாறு மக்களுக்குப் பக்திநெறியையும் சமயப்பற்றையும் உண்டாக்குவது' என்று கூறினார்கள். வகுப்புக்களில் 30 பேருக்குமேல் வந்து கலந்து கொண்டு கேட்டுப்பயன் பெறுகின்றனர்.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும்விழா 13—1—76 மாலை 7மணிக்கு I. T. O. திரு. B. நாகராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. " முருகனுடைய திருவருளைப் பெறுவதற்கு விரதம்முக்கியம். நியமத்தோடு முருகன் தோத்திர நூல்களில் ஒன்றைப் பாராயணம் செய்தால் நலம் பெறலாம் " என்று கூறினார்கள்.

10—2—76 செவ்வாய்க்கிழமை மாலை 7-மணிக்கு திரு. V. S. கந்தசாமி, I T. O அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. தலைவர் தமது உரையில் " வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொன்னால் கலங்குமே " என்ற அருள் வாக்குப்படி முருகப்பெருமானின் நாமத்தைச் சொன்னால் நம் வினைகள் அகலும் என்றும், அந்த நாமத்தைச் சொல்லுவதற்குக் கந்தன் கருணை - கடாட்சத்தை நாமும் பெற வேண்டும், என்றும், அதற்குக் கந்தபுராணம் பெரும் துணை புரிகிறதென்றும் கூறினார்கள். இவ்விரு நாட்களிலும் திரு. ஞானப்பிரகாசம், திரு N. இராமலிங்கம், திரு. இராமமூர்த்தி ஆகியோர் வேலூர்ப் பதிகங்களைப் பாராயணம் செய்தனர். பின்னர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமியின் திருவுருவப் படத்திற்கு சகஸ்ரநாம அருச்சனை செய்து தீபாராதனைகள் நிகழ்த்தி

விழாவிற்கு வந்திருந்த அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன.

மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னை தருமையாதீனசமயப் பிரசார நிலையச்சார்பில் சமயப் பிரசார வழிபாடு சென்னை கோடம்பாக்கம் ஸ்ரீ ஸ்வர்ணம்பிகை சமேத ஸ்ரீ பாரத்வாஜேஸ்வரர் கோயிலில் 25—1—76 ஞாயிறு மாலை 5 மணி முதல் 8-30 வரை நடந்தது. தேவார பாராயணத் துடன் கோயிலை வலம் வந்து சுவாமி, அம்பாளுக்கு அபிஷேகம் செய்வித்து எல்லா சந்நிதிகளிலும் அர்ச்சனைகள் செய்விக்கப் பெற்றன. இரவு 7 மணிக்கு மேல் திரு. N. R. முருகவேள், திரு. P. வடிவேல்பிள்ளை, திரு. B. C. லிங்கம், புலவர் திரு. K. ஆறு முகம்; புலவர் திரு. N. இராசு, திரு. த. கேசவன் முதலியவர்கள் சமயத்தின் பெருமையையும் வழிபாட்டின் இன்றியமையாமையை யும் பற்றிப் பேசினர்,

பிப்ரவரிமாத வழிபாடு சென்னை தியாகராயநகர் ஸ்ரீ சிவ விஷ்ணு ஆலயத்தில் 29—2—76 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 9-00 மணிவரையில் நடந்தது. அன்று நிலைய அன்பர்கள் சார்பில் கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் நிகழும் மண்டலாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது. ஸ்வாமி அம்பாளுக்கு முறைப்படி அபிஷேகமும் ஆலயத்திலுள்ள எல்லா மூர்த்திகளுக் கும் அர்ச்சனையும் செய்யப்பட்டன. வழிபாட்டின்போது திரு முறைப் பாராயணமும் நிகழ்ந்தது.

வழிபாட்டிற்குப் பின்னர் இரவு 8-00 மணிக்குமேல் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அறங்காவலர் திரு K M. சுப்பிர மணியம் அவர்கள் எல்லோரையும் வரவேற்று தருமையாதீனம் தருமத்தையும், சமயத்தையும் பேணிக் காத்துவருகிறது. இத் திருக்கோயிலின் கும்பாபிஷேகத்திற்கு அஷ்டபந்தன மருந்து கொடுத்து உதவினர்கள் என்று கூறி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானத்திற்குத்தம துவணக்கத்தைத்தெரிவித்துக்கொண்டார்கள். திரு. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், திரு. N R. முருகவேள் அவர்களும் சமய அறிவுதான் சன்மார்க்க நெறியில் வாழச்செய்யும். அதைச் சமயபோதனையால் பெறச் செய்யலாம் என்று விரிவுரையாற்றினர்கள். நன்றியுரையில் திரு. மு. க. புண்ணியகோடி அவர்கள் தருமையாதீனம் சென்னை யில் வழிபாட்டை நடத்தி மக்களுக்குப்பக்தியைப் பரப்பிவருகிறது என்று தெரிவித்தார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்–

(இராட்சசஞு பங்குனிமீ 1வ முதல் 30வ முடிய)

(14—3—1976 முதல் 12—4—1976 முடிய)

ஸ்ரீ இராட்சஸ ஞு மாசி மாதம் 30உ ஸ்திரவாரம் ஆயில்ய நக்ஷத்திரமாகிய தினத்தில் உதயம் முதல் 50 நாழிகை 4 விநாடிக்கு தனுர் லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் கும்பராசியிலிருந்து மீனராசியில் சங்கிரமணமாக ஸ்ரீ இராட்சஸ ஞு பங்குனி மாதப் பிரவேசம் செய்கருளுகிறார். அதன் பலன் ஈஸ்வர அனுக்கிரகத்தினால் உலக நாடுகளின் தலைவர்களாலும் ஆன்றோர்களாலும் உலகில் ஆங்காங்கு மனுநீதி பரிபாலன மேற்பட்டு பிரஜைகள் இரட்சிக்கப்படுவார்கள். உலகிலுள்ள எல்லா தர்ம ஸ்தாபனங்களும் அரசு வழி இயங்கும். உலகனைத்தும் உள்ள திருமடங்கள் அசாரிய பீடங்களிலுள்ள புண்ணிய சீலர்களின் சாஸ்திரோக்த நியமங்களில் இருந்து சிறக்கும். தேவாலயங்களில் உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். மக்கள் ஆஸ்திக வழியில் தெய்வத் திருவருளுடன் விளங்குவார்கள். சகல கோடி பிரஜைகளும் ஈசன் விட்ட வழியில் உழைப்புடையவர்களாகி உணவு, உடை, இருப்பிட சௌகரியம் ஆகியவற்றை யடைந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத் தரும். குடும்பத்தில் நிம்மதியான நிலைமையும் தனதாயத்துடன் கூடிய சௌகரியமும் இருந்துவரும். சகோதரர்கள் கட்டுப்பாடான நியம விதிகளை அனுசரிப்பவர்களாக இருப்பார்கள். பந்து மித்திரர் சமூகத்தினர் போற்றுதல், வித்துவத்வ கலைத்துறையில் பிரக்கியாதி ஆகிய நற்பலன்களை யளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமூகமும், புத்திரர்களுக்கு சுபங்களும் ஏற்படும். வியாஜ்ய

வழக்குகள் தெய்வ பலத்தில் நிற்கும். செய்தொழில் அல்லது உத்தியோகம் திறம்பட நடந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனாக நடக்கும். தன வரவு குடும்ப பிரச்னைகள் பலவற்றையும் சமாளிக்கும் அள விற்கு வந்துசேரும். சகோதரர்கள் அனுசரணையாக இருப்பார் கள். இம்மாதம் பெண் மகவு ஒன்று ஏற்படச்செய்யும். பூமி இயந்திரங்களில் முக்கிய செலவுகளை ஏற்க நேரும். தாம்பத்திய வாழ்வில் மன சலிப்பு காட்டி சௌகரியத்தையும் கொடுக்கும். சகல காரியங்களிலும் சித்தியும் மதிப்பும் ஏற்படும். தொழிலில் மேன்மை ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

(கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். தன சௌகரியம் திருப்திகரமாகவே இருந்துவரும். எதிர்பாராத ஓர் பொருள் வந்து சேரும். குடும்ப பிரச்னைகள் சுலபமாகத் தீரும். சகோதரர்களுக்கு நலம் பல ஏற்படும். பந்து அம்மான்களின் மனத்தாங்கலும் உடன் சரி செய்யும் ஆற்றலும் ஏற்படும். உடலில் இரத்த பித்த வாயு உபத்திரபம் காட்டி நீங்கும். தன் ஸ்திரிக்கு கெற்ப கோளாறும் உடன் சௌக்கியமும் ஆகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இராசாங்க கௌரவத்தை யளிக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனப் பெருக்கும் பூஷணமும் புத்தியில் தெளிவும் ஏற்படும். சகோதரர் கள் சுக சௌகரியமுடன் வாழ்வார்கள். புதிய வீடு கட்டுதல் பூர்வீகத்தை மாற்றுதல் ஆகிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும். பந்துமித்திரர்கள் ஒற்றுமையும் ரோகங்கள் குணமாவதுமாகும். தெய்வபலத்தினால் எல்லாக் காரியங்களும் சித்திபெறும். செய் தொழில் அல்லது உத்தியோகத்தில் கண்யம் மேவிடும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் = உத்திரம் ¼
(ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலனைத் தரும். தனலாபம் அதிகரிக்கும். குடும்ப நலம்பெருகும். சகோதரர்களுக்கு உயர்வு தரும். வித்துவத்தில் சிறப்பும், புத்தியில் தெளிவும் ஏற்படும். ஓர் புதிதான கட்டடம் அனுபவிக்கவரும். இயந்திர வாகனங்களில் நற்பலனைத்தரும். கோர்ட்டு வழக்குகளில் ஜெயமும் பூர்வப்பொருளில் ஆதாயம் பெறுவதுமாகும். புத்திரர்களின் தொழில்துறை ஓங்கும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறப்பாக நடந்துவரும். சனி ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½
(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடக்கும். தனவரவும் அதிகசெலவுமாக இருந்துவரும். சகோதரர்களின் தொழில் துறைகளில் மந்தமும் இக்கட்டான நிலைமையுமாக இருக்கும். நாற்கால் ஜீவன்களில் நஷ்ட பலனும். இயந்திர சாதனங்களில் முதலீடு ஏற்படும். பந்து அல்லது அம்மான்களில் ஓர் மனவருத்த சம்பவம் வரச்செய்யும். தாம்பத்ய வாழ்வில் மனவமைதி ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் எதிர்ப்பாளர் இருப்பினும் சாமார்த்தியமாக செயல்படுத்தும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾
(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடக்கும். தனச்செலாவணி சிறப்பாக இருந்துவரும். சகோதரர், பந்து அம்மான்கள் மிச்சிரமான போக்கில் இருப்பினும் தெய்வ பலத்தாலும் உறுதிப்பாட்டாலும் கடமையை நிறைவேற்றும் ஆற்றல் ஏற்படும். புத்திரர் புத்திரிகளுக்கு நலன்கள் ஏற்படும். பூர்வப் பொருள்களில் ஓர் குழப்பம் வந்து நீங்கும். மனைவிக்கு இரத்த பித்தமயக்கம் காட்டி உடன் குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்புதரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.
(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். தனவசதியில் எவ்விதக் குறைவும் இல்லாமல் இருந்து வரும். முன்வரவேண்டியவை வந்துசேரும். சகோதரருக்கு ஓர்

விபத்து வந்து நீங்கும், பெற்றோர்களின் உடல்நலம் திருப்திகரமாகவும் ஸ்திரீ வழி நன்மைகளும் இருந்துவரும். பசு பால் பிராப்தி. கால்நடைகளின் அபிவிருத்தி ஏற்படும். வயிற்றில் உஷ்ணரோகம் காட்டும். இயந்திர சாதனங்களில் ஓர் சங்கடம் வந்து நீங்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கண்யமும் மேலோர் சிலாகிப்பதுமாகிய சிறப்புப் பலனைத் தரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பத்தில் அமைதியற்ற சூழ்நிலையாகவும், சொந்த வருமானம் அற்பமாகவும், பிறர் மூலமும் ஸ்திரீ மூலமும் ஓரளவு பண வசதியும் இருந்துவரும். சகோதரிகளில் ஒருவருக்கு சுபம் ஏற்படும். பூமி இயந்திரம் இவற்றில் செலவு ஏற்படும். புத்திரருக்கு ஓர் முன்னேற்ற நிலைமை ஏற்படும். மனைவிக்கு இரத்த பித்தமயக்கம் வந்து குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மனோவேக போக்காக இருந்துவரும். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - க. கி.)

மகரராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபமான பலனைத் தரும். தனபாக்கிய அபிவிருத்தியை ஏற்படுத்தும். சகோதர மேன்மையும் பந்து அம்மான்களின் விசுவாசமும் திருப்தியளிப்பதாகும். நூதன ஆடை ஆபரணங்களின் பிராப்தி உண்டாகும். இயந்திர வாகனங்கள் வாங்க சந்தர்ப்பங்கள் ஏற்படும். இம்மாதம் பெண் மகவு பிராப்தியும் புத்திரிக்கு சுபமங்களமும் ஏற்படும் காலமாகும். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நன்மதிப்பு தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனாக நடக்கும். தனபாக்கியம் விருத்தியும் சுகமும் ஏற்படும். சகோதரருக்கு

அரசாங்கத்தில், மேலிடங்களில் உயர்வு தரும். வீடு வாகன வசதியும் பூர்வசொத்து சேர்க்கையும் இருந்து வரும். புத்திரர் புத்திரிகளாலும் அம்மான் வழியிலும் செலவுடன் கூடிய சுகமும் ஏற்படும். கணவன் மனைவியின் வாழ்வில் சகஜன்ய ஒற்றுமையுடன் குடும் பகாரியங்கள் செயல்படுவதாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சாதாரண பலனாக இருந்துவரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

(தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனாக நடந்து வரும். தனவசதியும் சிவந்த வஸ்துக்களின் லாபமும் ஏற்படும். பந்துக்களாலும் சுப விசேஷாதிகளாலும் செலவு இருந்து வரும். வெளியூர்பயணங்கள் நேரும். பொருளாதாரத்தில் நண்பர்களின் உதவிகள் ஒப்பந்தங்கள் ஏற்படும். தேவதாபக்தி மேலிடும். கோர்ட்டு வழக்குகளில் ஒத்திவைப்புகள் இருப்பினும் சாதகபலன் மிகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அல்லல் பிரச்சினையாக இருப்பினும் தெய்வானுக்கிரகத்தால் சீர்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

தருமை யாதீனம் 26-வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது மாதாந்தர ஜன்மநட்சத்திர நாள் வழிபாடு பாடல்பெற்ற தலங்களில் - காவிரியின் வடகரைத் தலங்களில் மாதந்தோறும் நடைபெற்று வருவதை அனைவரும் அறிவர். மாசி மாத வழிபாடு 15—2—76 ஞாயிற்றுக்கிழமை யன்று திருக்குருகாவூர் ஸ்ரீ வெள்ளடைநாதர் திருக்கோயிலிலும் திருக்கோலக்கா ஸ்ரீசப்தபுரீசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாள் விநாயகர் சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுக்கு அருச்சனைகளும் நடைபெற்றன. வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதிகப் பாராயணமும், பதிக விளக்க விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. திருக்குருகாவூர் திருக்கோலக்காத் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்கள் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் சென்று வழிபாட்டை உடனிருந்து நிகழ்த்தினர்கள். வழிபாட்டில் உள்ளூர் அன்பர்கள் பங்குகொண்டுபயன்பெற்றனர்.

சித்தாந்த வினா விடை

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் "ஞானசம்பந்தம் பதிப் பகத்தில்" வெளியிடப்பெற்றது. எழுதியவர் :- காஞ்சிபுரம், தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள். அடக்க விலை ரூ. 8—00. காலிகோ பைண்டு ரூ. 10—00. பக்கங்கள் 420.

சைவ சமயத்தின் இரண்டு கண்களாகத் திகழ்வன, திருமுறைகள் பன்னிரண்டும், மெய்கண்ட நூல்கள் பதினான்குமாகும். திருமுறைகளைத் தோத்திரங்கள் எனவும், மெய்கண்ட நூல்களைச் சாத்திரங்கள் எனவும் ஆன்றோர் கூறுவர்.

சைவ சித்தாந்த சாத்திரங்களை உள்ளவாறு அறிவோரே நம் சமயத்தின் அருமை பெருமைகளை அறிந்தோர் ஆவர். அந் நூல்களின் பொருள்களை ஓதி உணர்தற்குரிய அடிப்படைத்தகுதி மிகுதியும் வேண்டும். அத்தகுதி பெறுதோர் பலர் சைவ சித்தாந்தம் மிகவும் கடினமாக உள்ளது என்று கூறி அதனைப் படித்தறிவதற்கு முயலாது ஒதுக்கிவிடுகின்றனர்.

இதனைத் திருவுளம் கொண்ட தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் சைவ சித்தாந்த உண்மைகளை எளிய நடையில் ஞானசம்பந்தம் இதழில் மாதந்தோறும் வெளியிடுமாறு பணித்தருளினர்கள். அவ்வண்ணமே ஆசிரியரால் எழுதப்பெற்று ஞானசம்பந்தம் இதழில் தொடர்ந்து வெளிவந்தது. தற்பொழுது இது சைவ சித்தாந்த நுண் பொருள்களை எளிய நடையில் விளக்கும் வினாவிடை நூலாக வெளியிடப்பெற்றுள்ளது.

பொதுக் குறிப்பு, பிரமாணம், சித்தாந்தத் தொகைப்பகுதி, விரிப்பகுதி, பதிஇயல்; பசுஇயல், பாசஇயல், சாதன இயல், பயனியல் என்ற பல பெருந்தலைப்புக்களில் சைவ சித்தாந்தத் துள் கூறப்படும். அனைத்துப் பொருள்கள் பற்றியும் அறிந்து கோடற்குரிய சிறந்த நூலாய் விளங்குவது இந்நூல்.

தருமையாதீனக் குருமுதல் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழா மலராக இராக்ஷச வைகாசி 16 ஆம் நாள் (30—5—75) வெளியிடப்பெற்றது. அன்பர்கள் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக. நூலுக்குரிய தொகையை முன்பணமாக அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் செலவு தனி.

கிடைக்குமிடம் :- மானேஜர், தருமையாதீனம், தருமபுரம் மாயூரம் 609001.

தருமையாதீனத்தில்
கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பு

(திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு)

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவசமாதி கூடிய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானாம்பிகை உடனுறை ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் 10-5-76 முதல் பத்துநாட்கள் மகோற்சவம் நடைபெறும். இவ்விழா நாட்களில் தருமையாதீனத் திருமடத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டி 10—5—76 முதல் 20—5—76 முடிய கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பும், திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

சமயப்பயிற்சி வகுப்பு காலை மணி 10 முதல் 12 வரையிலும் மாலை மணி 3-30 முதல் 5-30 வரையிலும் நாள்தோறும் நடைபெறும். சைவ சித்தாந்த சாத்திரங்களும், வேதம், ஆகமம், பத்ததி, புராணம் முதலியவைகளும், திருமுறை முதலிய தோத்திர நூல்களும் அவ்வத்துறையில் சிறப்புமிக்க அறிஞர்களால் வகுப்பு முறையில் நிகழ்த்தப் பெறும். கலந்துகொள்ள விரும்புவோர்க்கு உணவும் உறையுளும் இலவசமாக அளிக்கப்பெறும்.

பள்ளி இறுதி வகுப்புக்குமேல் பயின்ற செகண்டரி ஆசிரியர்கள், புலவர் பட்டம் பெற்றவர்கள், உயர் கல்வி பெற்றவர்கள் இதில் கலந்து கொள்ளலாம். பயிற்சி பெற விரும்புவோர் தங்கள் பெயர், தகுதி, அலுவல்நிலை முதலின பற்றித் தெளிவாக எழுதுவதோடு கீழ்க்கண்ட முகவரிக்கு 30—4—76க்குள் விண்ணப்பித்துக் கொள்ளுதல் வேண்டும். இசைவுக் கடிதம் பெற்றபின் அக்கடிதத்துடன் 10—5—76 காலை 7-மணிக்குள் வந்து சேர்தல் வேண்டும். அவரவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் வந்துபோதல் வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்திரவுப்படி,

வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்.

தொடர்புக்கு:— மேலாளர், தருமையாதீனம்,
தருமபுரம், மாயூரம் 609001

தருமை ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

10—5—76 திங்கட்கிழமை காலை சமயப்பயிற்சி வகுப்பைத் தொடங்கி வைத்து ஆசியருளல்.

நாள்	காலை 10—11	காலை 11—12	மாலை 3½—4½	மாலை 4½—5½
	“ சிவஞானபோதம் ”	திரு. சி. அருணைவடிவேல் முதலியார் “பிறமத விளக்கம்” – “சித்தியார்பரபக்கம்” “ சங்கற்ப நிராகரணம் ”	“ திருவருட்பயன் ”	
10—5—76 திங்கள்		புறப்புறச்சமயங்கள்: (1) உலகாயதம்		திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் “ வேதம் ”
11—5—76 செவ்வாய்		” நால்வகைப் பௌத்தம் (2) மாத்தியமிகம் (3) யோகாசாரம் (4) வைபாடிகம் (5) சௌத்திராந்திகம்		திரு. எஸ். சுவாமிநாத சிவாசாரியார் “ சிவாகமம் ”
12—5—76 புதன்		(6) சமணம்		திரு. இராமதாச ஐயர் “ உபநிடதங்கள் ”
13—5—76 வியாழன்		புறச்சமயங்கள்: (1) தருக்க மதம் (2) மீமாஞ்சைமதம்		திரு. எஸ். சுவாமிநாத சிவாசாரியார் “ பத்ததிகள் ”

14—5—76 வெள்ளி	திரு. கி. வச்சிரவேல் முதலியார்	,, (3) ஏகான்மவாதம்	மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்	திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் " புராணங்கள் "
15—5—76 சனி		,, (4) சாங்கியமதம் (5) யோகமதம் (6) பாஞ்சராத்திரம் அல்லது வைணவம்		திரு. வி. சபேசன் " திருமுறைகள் "
16—5—76 ஞாயிறு		அகப்புறச் சமயங்கள்: (1) பாசுபதம் (2) மாவிரதம் (3) காபாலம் (4) வாமம் (5) வைரவம் (6) ஐக்கியவாதசைவம்		திரு. இரா. செல்வக்கணபதி " பண்டார சாத்திரங்கள் "
17—5—76 திங்கள்		அகச்சமயங்கள்: (1) பாடாணவாத சைவம் (2) பேதவாத சைவம் (3) சிவசமவாத சைவம்		திரு. இராமலிங்கம் எம். ஏ. " தலபுராணங்கள் "
18—5—76 செவ்வாய்		,, (4) சிவசங்கிராந்தவாத சைவம் (5) ஈசுர அவிகாரவாத சைவம் (6) சிவாத்துவித சைவம் (7) சுத்த சைவம்		திரு. வி. சா. குருசாமி தேசிகர் " ஆதீன அருள் நூல்கள் "

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்சொந்தமான

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

சப்தஸ்தான விழா

திருவையாறு தென்கயிலாயம் எனப்படுவது. திருக்கயிலை மலையில் அதிகார நந்தியாக இருந்து காவல் புரிபவரும் அகச்சந்தான குரவர்களுள் முதலாமவருமாகிய திருநந்தி தேவர் அவதாரத் தலம் திருவையாறு. அவரது அவதாரத் திருநக்ஷத்திரம் பங்குனித் திருவாதிரை. மறுநாள் திருமழபாடி ஸ்ரீ வஜ்ஜிரஸ்தம்பேசுவரர் திருக்கோயிலில் நந்தியெம்பெருமான் திருக் கல்யாண விழா, சிறப்புற நிகழும். இவ்விழாவிற்கு, நந்திகேசுவரர் உடன்வர ஐயாற்றுப் பெருமான் திருமழபாடிக்கு எழுந்தருளி திருக்கல்யாணம் செய்வித்தருளி திருவையாற்றுக்கு எழுந்தருள்வர்.

திருவையாற்றில் சித்திரைப் பெருவிழாவிற்குப் பின்னர் நடைபெறும் விழா சப்தஸ்தான விழா (ஏழூர் விழா) இவ்விழாவை நந்திகேசுவரரின் திருக்கல்யாண ஊர்வல விழா என்பர். ஐயாற்றுப்பெருமான் கண்ணாடிப் பல்லக்கிலும் நந்திகேசுவரர் திருக்கல்யாணக் கோலத்தோடு வெட்டிவேர்ச் சிவிகையிலுமாக காலையில் ஏழூர் வலம்வர எழுந்தருள்வர். திருப்பழனம்திருவேதிகுடி,திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய தலங்களுக்கு எழுந்தருளி மறுநாள் ஏழூர் மூர்த்திகளுடன் ஐயாற்றுப்பெருமான் ஐயாற்றுக்கு எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகத் திகழும். ஒவ்வொரு தலத்திலும் அவ்வத் தலத்துப் பெருமான் ஐயாற்றுப் பெருமானை எதிர்கொண்டழைப்பதும் ஆங்காங்கும் மண்டப தீபாராதனை முதலியன நிகழ்த்துவதும் சிறப்பு நிகழ்ச்சியாகும். ஏழு ஊரிலும் உள்ளபெருமக்கள் மிகுந்தஉற்சாகத்தோடு தங்கள் தங்கள் ஊர்களை ஒப்பனைசெய்து திருவீதியுலாவில் கலந்துகொள்ளும் பக்தர்களை வரவேற்று உபசரிப்பது முதலிய நிகழ்ச்சி எங்கும் காண்டற்கரியது. திருச்சோற்றுத்துறைக்கு நண்பகலில் ஐயாற்றுப்பெருமான் எழுந்தருள்வர். சோற்றுத்துறை என்ற பெயருக்கேற்ப அங்கு எல்லோருக்கும் சோறு (உணவு) அளிக்கப்பெறும். அன்று இரவு திருப்பூந்துருத்தியிலிருந்து எழுந்தருளும் போது காவிரிக்கரையில் நிகழும் வாண வேடிக்கைகள் முதலியவை காணத்தக்கவை.

இத்தகு சிறப்புமிக்க இவ்விழா இவ்வாண்டு வைகாசித் திங்கள் 1-ம் நாள் (14—5—76) வெள்ளிக்கிழமை அன்று நிகழவுள்ளது. இவ்விழாவில் பக்தர்கள் பங்குகொண்டு வழிபட்டு கண்பெற்ற பயனைப் பெற்றுய்வார்களாக.